பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 08, செவ்வாய்க்கிழமை 21.02.2017 கதிர் 108

## அரிசி குறித்து முறையிட 1977' ஐ அழைக்கலாம்!

அரிசிமோசடிகள்தொடர்பாக 1977 எனும் இலக்கத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும் எனஅமைச்சர்ரிஷாத்பதியுதீன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, அரிசியைப் பதுக்கிவைத்தல்,அரசின்கட்டுப் பாட்டுவிலைக்கு அதிகமாகவிற் பனை செய்தல் மற்றும் இரசா

பக்கம் 18 >>>

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

# காலத்தை இழுத்தடிக்காதீர்!



## மைத்திரி அரசுக்கு இந்தியா நேற்று உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி.21

**"உலகத்தை நீண்ட காலத்துக்கு எதிர்பார்த்துக் காத்திருக்க வைக்க முடியாது. இனியும் காலத்தை இழுத்தடிக்க வேண்டாம். இந்த ஆண்டுக்குள் எப்படியாயினும் இனப்பிரச்சினைக் கான தீர்வு எட்டப்பட வேண்டும்."**

**- இத்தகைய காட்டமான செய்தி ஒன்றை இந்தியா நேற்று இலங்கைக்குத் தெரியப்படுத்தி யிருக்கின்றது.**

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தலைமையிலான வெளிவிவகாரக் குழு ஒன்று இலங்கை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வையும் தனித் தனியாகச் சந்

பக்கம் 18 >>>

## அரசமைப்புப் பேரவையை முடுக்கிவிட அரசுக்கு இந்திய அழுத்தம் அவசியம்!

### தமிழர் தரப்பின் இப்போதைய கோரிக்கை இதுதான்

கொழும்பு, பெப்.21

"இனப்பிரச்சினைத் தீர்வுக் கான விடயங்களையும் உள் ளடக்கிய அரசமைப்புப்பேரவை யின் செயற்பாட்டை இனியும் தாமதித்து, இழுத்தடிக்காமல், முடுக்கி விடுவதற்கு இலங்கை அரசுத்தலைமைக்கு அழுத்தம் கொடுங்கள்!"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சார் பில் இந்திய உயர்மட்டக் குழு

பக்கம் 18 >>>



## கிளிநொச்சியில் இரு இடங்களில் நேற்றுத் தொடங்கியது போராட்டம்

கேப்பாபிலவு, புதுக்குடி யிருப்பு மக்கள் போராட்டங் களைத் தொடர்ந்து நேற்று கிளி நொச்சியிலும் இரு இடங்களில் மக்கள் போராட்டங்கள் வெடித் தன.

கிளிநொச்சியில்பரவிப்பாஞ் சான் மக்கள்தமது காணிகளை மீட்பதற்காகக் கவனவீர்ப்பில் குதித்தனர்.( விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்.)

அதேபோன்று காணாமற் போன உறவுகளைத் தேடிக் கண்டறியும் நோக்கோடு அவற் றின் உறவுகள் கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் முன்றி லில் நேற்று தொடர் கவன வீர்ப்பை ஆரம்பித்தன. (விரிவான செய்தி 20 ஆம் பக் கத்தில்) (உ)

## ஆயுதப் போராட்டத்தால் பதவி பெற்றோர் அதைக் கொச்சைப்படுத்த முயலக் கூடாது

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. காட்டம்

வவுனியா, பெப்.21

முப்பது வருடகால ஆயுதப் போராட் டமும் போராளிகள் மற்றும் பொது மக்களுடைய தியாகமும் தான் இன்று ஐ.நா. உட்பட உலகத்தையே நம் பக் கம் திரும்பிப்பார்க்கவைத்திருக்கின்றது என்று ஈ.பி. ஆர்.எல்.எவ் கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின்நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

முப்பது வருட காலப் போராட்டத்தால் நாங்கள் எத்தகைய

பக்கம் 18 >>>



## எல்லாவற்றையும் ஒன்றாகக் கேட்காதீர்கள்!

### முதலில் பெறக் கூடியதைப் பெறுங்கள் என்கிறது இந்தியா

கொழும்பு, பெப்.21

"இனப்பிரச்சினைத்தீர்வுவிட யத்தில் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் அடைய வேண்டும் என்று கேட்காதீர்கள்!"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆலோ சனை தெரிவித்தார் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஜெய்சங்கர்.

நேற்றுக் கூட்டமைப்பினரு டன்நடந்தபேச்சுக்களின்போது, வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்தும், இலங்கை - இந்திய ஒப்பந்தம்பற்றியும்சுரேஷ்பிரே மச்சந்திரன் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு கூறி னார்.

"இலங்கை - இந்திய ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்துவ தற்காக இந்திய ஜவான்கள் மட் டும் உயிரிழக்கவில்லை. எமது ஈ.பி. ஆர். எல்.எவ்வின்போராளி

பக்கம் 18 >>>

## தமிழர் தரப்பின் ஒத்துழைப்புக் குறித்து இந்தியாவுக்கு அவநம்பிக்கை!

### முகத்தில் அடித்தாற் போல் வெளிவிவகாரச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21

இலங்கையில் இந்தியத்தரப் பின்நடவடிக்கைகள் விடயத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒத்துழைப்புக்குறித்து இந்தியா வுக்குக் கடும் அவநம்பிக்கை நிலவுகின்றமை இந்திய உயர் மட்டக் குழுவுக்கும் தமிழ்த்தேசி யக்கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுக் களின்போதுதெளிவாகவெளிப் பட்டது என அறியவந்தது.

சந்திப்பின் ஆரம்பத்தில் இந் திய வெளிவிவகாரச் செயலர் ஜெய்சங்கர் தங்களின் இலங்கை விஜயத்தை ஒட்டிய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி னார்.

"இரண்டு விடயங்களைமுக் கியமாகக் குறிப்பிட விரும்புகி

பக்கம் 18 >>>




## 5 படையினரும் இடை நிறுத்தம்




'த நேஷன்' பத்திரிகையின் பிரதிஆசிரியர்கீத்நொயர்2008 ஆம்ஆண்டு கடத்தப்பட்டு மூர்க் கமாகத் தாக்கப்பட்டமை தொடர் பாகத் தற்போது கைது செய்யப் பட்டுவிளக்கமறியலில்வைக்கப் பட்டுள்ள மேஜர் உட்பட ஐந்து இராணுவத்தினரும்சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள் ளனர்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்திகள் 07, 13 ஆம் பக்கங்களில்)

# சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கு ஜப்பான், இந்திய உறவு இலங்கைக்குத் தேவை

### ஜப்பான் புத்திஜீவி சட்டோரு நகாவோ கருத்து

கொழும்பு, பெப்.21

இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இந்தியா மற்றும் ஜப்பானுடனான உறவை இலங்கை வலுப்படுத்த வேண்டும் என்று ஜப்பானிலுள்ள கொகுஸின் பல்கலைக்கழக சட்ட பீடத்தில் பாதுகாப்புத் துறை கற்கைகள் விரிவுரையாளராக விளங்கும் கலாநிதி சட்டோரு நகாவோ கருத்து வெளியிட்டுள்ளார்.

சீனாவின் வளர்ச்சியால் இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் தரப்பில் ஏற்பட்டுள்ள தாக்கம் என்ற தொனிப்பொருளில் கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தில் உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை பெரும்பாலும் சீனாவின் உதவிகளை நாடி வருகின்றது. இந்த நிலையில் அது இந்தியாவுடனான ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

அத்தோடு இந்தியாவுடன் தோழமையாகவுள்ள ஜப்பான் போன்ற நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்துவதிலும் இலங்கை கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவின் வளர்ச்சியை வலுவாக ஆதரிக்கும் நாடாக ஜப்பான் திகழ்ந்துவருகிறது. அதேவேளை பல ஆண்டுகாலமாக இலங்கையின் ஸ்திரமான ஆதரவாளராகவும் ஜப்பான் திகழ்கின்றது.

இதேவேளை, இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவு சிறந்த நிலையில் காணப்படுகிறது என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கெனுச்சி சுகனுமா தெரிவித்துள்ளார். - என்றார்.

ஜப்பானிய விஸாவைப் பெறுவதற்கான புதிய நிலையத்தை கொள்ளுப்பிட்டி கீதாஞ்சலி பிளேஸில் திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இலங்கையில் இருந்து இருபதாயிரத்துக்கு அதிகமானவர்கள் ஜப்பானிய விஸாவுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்று குறிப்பிட்ட அவர் கடந்த ஆண்டில் 23 ஆயிரத்துக்கும் அதிகமான ஜப்பானியர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## சாரண சேவையாளர் கௌரவிப்பு

நீண்ட காலமாக இலங்கைச் சாரணர் சேவையில் பணியாற்றுவோர் கௌரவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

பிரதம சாரணஆணையாளர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார்.

சாரணர் சேவையில் 15 தொடக்கம் 25 வருட சேவைகளைப் பூர்த்தி செய்தவர்கள் இதில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ)

# நில மீட்புக்கான போராட்டம் கிளிநொச்சியிலும் ஆரம்பம்



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்களும் தங்களது காணிகளை கையளிக்கும் வரை தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மக்களது காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேற்றி, காணிகளை மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் இதற்கு முன்னர் தொடர்ச்சியாகப் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இருப்பினும் முற்றாக பரவிப்பாஞ்சான் காணிகள் விடுவிக்கப்படவில்லை பரவிப்பாஞ்சான் காணிகளை முற்றாக விடுவிப்பதாக வாக்குறுதிகள் மட்டுமே அரசியல்வாதிகளாலும் அரச அதிகாரிகளாலும் வழங்கப்பட்டு இருந்தன என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

ஆனால் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம் முற்றாக விடுவிக்கப்படும்வரை தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ- 70)



# கேப்பாபிலவு மக்களுக்கு முஸ்லிம் மக்கள் ஆதரவு

கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் சொந்த நிலங்களை மீட்கும் போராட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம் சமூகத்தினர் தமது ஆதரவைத்தெரிவித்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு இரவு உணவையும் வழங்கினர்.

கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்க வேண்டுமென கோரி கடந்த 21 நாள்களாக தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தைவிமானப் படைத்தளத்துக்கு முன்பாக வீதி ஓரத்தில் முன்னெடுத்துவருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மக்களின் போராட்டத்துக்கு உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஆதரவு பெருகிவரும் நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம் சமூகத்தினர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் முல்லைத்தீவு கிளையினரும்முல்லைத்தீவு, நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, ஹிஜ்ராபுரம் ஆகிய பள்ளிவாசல்களின் பரிபாலன சபையினரும் நேற்று முன்தினம் மாலை கேப்பாபிலவு மக்களின் போராட்டக்களத்துக்கு நேரடியாக வருகைதந்து தமது ஆதரவை வெளியிட்டனர். (ஐ-81)

# கொழும்பில் சட்டவிரோதமான முறையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள்!

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டு

கொழும்பு, பெப்.21

கொழும்புப் பிரதேசத்தில் மாத்திரம், சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்ட கட்டடங்கள் 10 ஆயிரத்துக்கு மேல் உள்ளன என்று மாநகர அபிவிருத்தி மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது அவர்தெரிவித்துள்ளவை வருமாறு:-

பம்பலப்பிட்டியிலிருந்து வெள்ளவத்தை வரை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி, அநாவசியமான கட்டடங்கள் 10 ஆயிரத்து 800 அமைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், கட்டுமானப் பணிகளுக்கான அனுமதியை நகர சபை, பிரதேச சபைகளில் பெற வேண்டிய தேவையில்லை.

எதிர்வரும் 3 மாதங்களில், அனுமதி பெறுவதற்கான புதிய முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.



அதாவது, எந்தவொருநபரும் இணையத்தினூடாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறை ஏற்படுத்தப்படும்.- என்றார். (ஐ)

## கடற்றொழிலாளருக்கு உபகரணங்கள்

தென்மராட்சி, பெப்.21

மீள்குடியேற்ற அமைச்சால் தென்மராட்சியைச் சேர்ந்த 75 கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தவர்கள், இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்கள் ஆகியோருக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன. (ஐ)

# முல்லைத்தீவில் அத்துமீறியுள்ள தென்னிலங்கை மீனவருக்கு வழக்கு

முல்லைத்தீவு கருநாட்டங்கேணியில் அத்துமீறிய வகையில்வாடி அமைத்துள்ள தென்னிலங்கை மீனவருக்கு எதிராக கரைதுரைப்பற்று பிரதேச செயலாளரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கருநாட்டுக்கேணிப் பகுதியில் யுத்த காலத்துக்கு முன்பு உள்ளூர் மீனவர்களின் இறங்குதுறையாக இருந்த பிரதேசத்தை உள்ளடக்கியதாக, எவரின் அனுமதியும் இன்றி அந்தப் பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக தென்னிலங்கை மீனவர் ஒருவரால் அடாத்தான வகையில் வாடி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இந்த வாடி மீள்குடியேற்றக் காலத்தில் 2012 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டது.

இந்த நிலையில் மீனவ அமைப்புக்கள் அது தொடர்பில் தமது ஆட்சேபனையை தெரிவித்தன. இருந்த போதும் தென்னிலங்கை மீனவர் அதற்கு கட்டுப்படாது தொடர்ந்தும் செயற்பட்ட நிலையில் இந்த விடயம் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஆனால் உரிய தீர்வு எட்டப்படவில்லை.

வாடி அமைப்பதற்கான பிரதேசசெயலாளரின் எழுத்துமூலமான அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பெறப்படாது அமைக்கப்பட்ட வாடியை அகற்றுமாறு பிரதேச செயலாளரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் தென்னிலங்கை மீனவர் இதனை ஏற்க மறுத்திருந்தார். இதன் காரணமாக கடந்த 16 ஆம் திகதி பிரதேச செயலாளரால் இந்த வாடி உரிமையாளருக்கு எதிராக முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கேப்பாபிலவில் மக்களுக்கு அச்சுறுத்தல்; மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

## நேரில் மக்களிடம் சென்றனர் அதிகாரிகள்



முல்லைத்தீவு, பெப்.21

நிலம் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களை விமானப் படையினர் அச்சுறுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் பிலக்குடியிருப்பு மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவில்லை. அதனால் அவர்கள் சூரிபுரம் என்ற இடத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரவல் நிலத்தில் இருக்க முடியாது, சொந்த நிலமே வேண்டும் என்று கோரிய மக்கள் கடந்த ஜனவரி 31ஆம் திகதி வரை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவுகள் பெருகி வருகின்ற நிலையில், அங்குள்ள விமானப் படையினர் தங்களை அச்சுறுத்துகின்றனர் என மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குறிப்பாக, விமானப் படையினர் எடுக்கும் படங்களும், மக்கள் அத்து மீறிக் காணிக்குள் நுழைந்தால் சுடப்படுவார்கள் என்ற எச்சரிக்கைப் பலகைகளின் புகைப்படங்களும் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தன.

மேலும், தங்கள் தரப்பிலுள்ள சிலருக்குப் படையினர் மதுபானங்களைக் கொடுத்து அவர்கள் மூலம் போராட்டத்தைக் குழப்ப முயல்கின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தமது மாதிரிக் கிராமங்களுக்குச் சென்றுவருகின்ற மக்களைப் படைப் புலனாய்வாளர்களுடன் சேர்ந்து இயங்கும் சிலர் அச்சுறுத்துகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று போராட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். படையினர் மக்களை அச்சுறுத்தி விளம்பரப் பலகைகள் நாட்டிய இடங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். (ம-8)

# பரவிப்பாஞ்சான் மக்களின் காணிகளை மீள வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரதமரிடம் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேரில் வலியுறுத்தல்

கிளிநொச்சி, பெப்.21

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் காணிகளை விடுவிக்குமாறு கோரி மீண்டும் இன்று முதல் (நேற்று) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயத்தில் பிரதமர் தலையிட வேண்டும் என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று மாலை ஐ.தே.க.வின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. இங்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் –

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டிலுள்ள பொது மக்களின் காணிகளை இரண்டு மாதத்திற்குள் விடுவிப்பர் என பாதுகாப்புசெயலாளர் கடந்த செப்ரெம்பர் மாதம் உறுதி வழங்கியிருந்தார். கடந்த செப்ரெம்பர் மாதம் இப்பகுதி மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற போதிலும் அவர்கள் போராட்டத்தை கைவிடவில்லை.

பின்னர் பாதுகாப்பு செயலாளருடன் தொடர்பு கொண்ட நான் இவ் விடயம் குறித்து எடுத்துக் கூறியமையையடுத்து இரண்டு மாத காலத்துக்குள் பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டது. இவ்விடயத்தை நான் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்குத் தெரிவித்தேன். அதையடுத்து அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் உறுதியளித்தபடி காணிகள் விடுவிக்கப்படாமமையினால் இப்பகுதி மக்கள் மீளவும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். எனவே இந்த விடயத்தில் பிரதமர் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இவ் விடயம் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார் எனவும் அதற்கான விவரங்களை தருமாறும் பிரதமர் கேட்டுக் கொண்டமையை அடுத்து அந்த விவரங்களை இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதமரிடம் கையளித்தார். (ம)

# அச்சுவேலியில் கொள்ளையிடப்பட்ட ஓட்டோ வல்வெட்டித்துறையில் மீட்பு



வடமராட்சி, பெப்.21

அச்சுவேலியில் வைத்து சாரதியைத் தாக்கிவிட்டு கொள்ளையிடப்பட்ட ஓட்டோ நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறையில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ். நகரில் இருந்து வடமராட்சிக்குச் சென்றுகொண்டிருந்த ஓட்டோவை அச்சுவேலி வளலாயில் வழிமறித்த சிலர் சாரதியைத் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த ஒரு தொகைப் பணத்தையும் பறித்ததுடன் ஓட்டோவையும் கொள்ளையிட்டுச் சென்றனர். அது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் ஓட்டோ ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. அது தொடர்பாக வல்வெட்டித்துறைப்பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அது வளலாயில் கொள்ளையிடப்பட்டது என்பதை அறிந்த பொலிஸார் அச்சுவேலிப் பொலிஸாரிடம் அதனைப் பாரப்படுத்தினர். (ம-40)

# லொறியில் கொண்டுசெல்லப்பட்ட 98 ஆடுகள் கைப்பற்றப்பட்டன

## சந்தேக நபர்கள் மூவரும் கைது



கிளிநொச்சியில் இருந்து புத்தளத்திற்கு லொறி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 98 ஆடுகளை வவுனியா – ஈரற்பெரியகுளம் பொலிஸார் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

உரிய அனுமதியோ, எந்தவிதமான ஆவணங்களோ இன்றி ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன என்றும் தாங்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே அவை கண்டுபிடிக்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடுகளைக் கொண்டுசென்ற மூன்று சந்தேக நபர்கள் இதன்போது கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அதன் பின்னர் அவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸார் மேலும் கூறினர். (ம-100)

# மல்லாகம் நீதிமன்றில் அபராதம் செலுத்தியவர் மயங்கி வீழ்ந்தார்

மல்லாகம், பெப்.21

டெங்கு பரவக்கூடிய சூழலை வைத்திருந்த ஒருவர் மல்லாகம் நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்திவிட்டு வெளியே வரும்போது மயங்கி வீழ்ந்தார். அவருக்கு அங்கிருந்தவர்கள் முதலுதவிச் சிகிச்சை வழங்கி அனுப்பிவைத்தனர்.

தாவடிப் பகுதியில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழலை வைத்திருந்த 7 பேர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ரி.கருணாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களில் ஒருவரே மயங்கி வீழ்ந்தார். (ம)


# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## வருடாந்த பொதுக் கூட்டம் - 2017

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி பங்குனி 2017 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

யாழ். சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் காலை 10 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்.

செல்வராசா கஜேந்திரன்,
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய
மக்கள் முன்னணி.

தொடர்புகளுக்கு:
077 302 4316, 021 222 3739, 077 606 8834

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## நிலைப்பாட்டை தெளிவுபடுத்துங்கள்!

நாம் இந்தப் பத்தியில் ஒரு விடயத்தைத் தெளிவாகத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றோம். அது, இனப் பிரச்சினை விடயத்தில் நாம் தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டிவிட்டோம் என்பது தான்.

தீர்வுக்கான சீட்டாட்டத்தில் எல்லாச் சீட்டுக்களையும் எங்கள் நெஞ்சுக்கு நெருக்கமாக எந்நேரமும் வைத்துக் கொண்டு, தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிக்க முடியாது. வைத்திருக்க வேண்டிய சீட்டை வைத்துக் கொண்டு, மேசையில் இறக்க வேண்டிய சீட்டை மேசையில் மடித்தோ, புரட்டியோ இறக்கத்தான் வேண்டும். அதற்கான காலமும் வேளையும் வந்துவிட்டது. இனியும் ஒளித்துப்பிடித்து விளையாட முடியாது.

தமிழரின் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இன்று உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக - பெரும்பாலும் ஏகபிரதிநிதிகளாக - அது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது - அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

தேர்தல் காலத்தில் வாக்கு வேட்டைக்காகப் பல்வேறு விடயங்களைக் கூறிய கூட்டமைப்பு, இப்போது பேச்சு மேசையில் என்ன செய்யப்போகின்றது என்பதுதான் கேள்வி.

சுதந்திரத் தமிழீழத் தாயகம் கோரி தமிழினம் நடத்திய ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் பின்புலத்திலேயே, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், தமிழரின் இறைமை, சுயநிர்ணயம், சமஷ்டி முறைத் தீர்வு பற்றியெல்லாம் கூட்டமைப்பினரால் பேசப்பட்டது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவையே பிரதான அம்சங்களாகவும் ஓங்கி ஒலித்தன.

இப்போது, தீர்வு குறித்து திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இதிலும், சமஷ்டியில் உறுதியாக இருக்கின்றோமா, இணைப்பில் விடாப்பிடியாக உள்ளோமா என்பவை குறித்தெல்லாம் எமது பிரதிநிதிகள் தெளிவாகவும், தீர்க்கமாகவும், திட்டவட்டமாகவும் முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். இனியும் பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டிக் கொண்டிருப்பது போல இரட்டை நிலைப்பாட்டில் இருக்க முடியாது.

சமஷ்டியை விட்டுக் கொடுக்கின்றோமா இல்லையா, இணைப்பில் உறுதியாக - பிடிவாதமாக நிற்கப் போகின்றோமா, இல்லையா? இதை மக்கள் பிரதிநிதிகள் தமக்குள் கூடி ஆராய்ந்து, திட்டவட்டமான ஒரு முடிவை எடுத்து ஒரு தீர்மானத்துக்கு வந்தாக வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. போன்றவை எல்லாம் தத்தமது நிலைப்பாட்டை அறிவித்துவிட்டன. எந்த எல்லைவரை தாங்கள் கீழிறங்க முடியும் என்பதையும் அவை வெளிப்படுத்திவிட்டன.

தமிழர் தரப்புத்தான் இன்னமும் ஒரு முடிவெடுக்காமல், இரண்டும் கெட்டானாக விடயங்களை பிரதிபலித்துக் கொண்டு நிற்கின்றது.

கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்றுச் சந்தித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜெய்சங்கரினால் "உங்கள் எதிர்பார்ப்புத் தொடர்பில் முன்னுரிமை வரிசை என்ன?" - என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

அது தொடர்பில் திட்டவட்டமான - ஒரே குரலில் பேசக்கூடிய - நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமச்சந்திரன் வடக்கு - கிழக்கு இணைப்புக் கைவிட முடியாதது. அதைவிடாது வலியுறுத்துவதே எமது முன்னுரிமை நிலைப்பாடு என்று குறிப்பிட்டார்.


ஆனால், சம்பந்தரும் சுமந்திரனும் அதனை வலியுறுத்தவில்லை. அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அதற்கான வழிகாட்டல் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை ஏற்றுக் கொள்ள வையுங்கள். அதுவே எமது முன்னுரிமை நிலைப்பாடு - என்ற சாரப்பட சுமந்திரன், சம்பந்தர் இணை வற்புறுத்தியதாம்.

அப்படியானால், வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி, தமிழர் இறைமை என்ற பேச்செல்லாம் என்னவாயிற்று? "அந்தக் கோரிக்கைகள் இன்னும் அப்படியே மேசையில் இருக்கின்றன, நாம் அதை வலியுறுத்தி நிற்போம்" - என்ற பதில் இனியும் பொருத்தமற்றது. அந்தக் கோரிக்கைகள் மேசையில் இருப்பவை என்றால் இருந்துவிட்டுப் போகட்டும். நீங்கள் அதை விடாப்பிடியாக வைத்திருக்கப் போகின்றீர்களா, அல்லது அவற்றைக் கைவிட்டு அடுத்த கட்டத்துக்குக் கீழ் இறங்கத் தயாராக இருக்கின்றீர்களா என்பதைத் தமிழர் தலைவர்கள் - கூட்டமைப்புத் தலைவர்கள் - வெளிப்படுத்தி ஆகவேண்டும்.

'தமிழீழம்' கேட்டு, அதற்காக 1977 இல் ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களோடு சேர்ந்து மக்கள் ஆணை பெற்று வந்தவர்தான் சம்பந்தர். அவர் கீழ் இறங்கி இப்போது தமிழீழத்தைக் கைவிட்டு, 'வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சமஷ்டித் தீர்வுக்கு' அதே மக்களிடம் ஆணை பெறவில்லையா?

தனித் தமிழீழத்துக்கு ஒற்றைக் காலில் நின்ற தலைவர் பிரபாகரன், 'ஐக்கிய இலங்கைக்குள் தமிழரின் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு' இறங்கி வரவில்லையா?

இப்போது சமஷ்டியையும், இணைப்பையும் விட்டுக்கொடுக்கப் போகின்றீர்கள் என்றால், அதை மக்கள் முன் வெளிப்படையாகக் கூறி, அவர்கள் அனுமதி பெறுங்களேன். அதற்கேன் பின்னடிப்பும் இழுத்தடிப்பும்...?




# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாவிடில் வெகுஜனப் போர்

## ஒன்றிணைந்த எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நடத்தாவிட்டால், அரசுக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்களை வீதியில் இறக்கி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக, ஒன்றிணைந்த எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிரணியின் பதுளை மாவட்டக் கூட்டம், பதுளை, வெலிகம விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

### வங்குரோத்து நிலையில் மைத்திரி - ரணில் அரசு

மைத்திரி, ரணில் தலைமையிலான கூட்டாட்சி, குறுகிய காலத்துக்குள்ளேயே, வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதுடன், நாட்டு மக்களின் பலத்த எதிர்ப்புக்கும் உள்ளாகியுள்ளது. ஆட்சியைத் தொடர்ந்து கொண்டு நடத்த முடியாமல், நல்லாட்சி அரசு தத்தளிக்கிறது.

நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்த அரசுக்கு ஒட்சிசன் ஏற்றப்பட்டாலும், நோயைக் குணமாக்க முடியாது. படுபாதாளத்தை நோக்கி, இவ்வாட்சி சென்று கொண்டிருக்கின்றது. ஆட்சியாளர்களிடையே குழப்பகரமான சூழல் ஏற்பட்டுள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தவாறு உள்ளனர்.

மத்திய வங்கியில், பெரியளவிலான ஊழல்-மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறான விடயங்களில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மௌனம் சாதித்து வருகின்றார். 99 வருடங்களுக்கான குத்தகைக்கு, எமது நாட்டின் வளங்கள் வெளி நாட்டாருக்குக்குத் தகைக்கு விடப்பட்டுக் கொண்டிருக்கின் றன. குறிப்பிட்ட 99 வருடங்கள் நிறைவு பெற்றதும், மீளவும் 99 வருடங்களுக்கு அந்த நாட் டவர்களுக்கே வழங்கப்படும் வகையில், ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டிருக்கின்றது.

மக்கள், வாக்குகளை அளித்து, ஆட்சியாளர்களை நியமித்திருப்பதும் ஐந்து வருடங்களுக்கு மட்டுமே. அந்நிலையில், நாட்டு வளங்களை வெளிநாட்டாருக்கு 99 வருடங்களுக்குக் குத்த கைக்கு விடுவதற்கு, ஆட்சியாளர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இதற்கு அவர்கள் பதில் கூறியாக வேண்டும். நாடாளுமன்றத்தில் ஒன்றி ணைந்த எதிரணியாக இருக்கும் எம்மில் ஒருவருக்கே, எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.


### அழிவுப் பாதையில் நகர்கிறது நாடு

ஆனால் ஆட்சியாளர்கள், தமக்கு வேண்டிய ஒருவரை, எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துக் கொண்டுள்ளனர். நாட்டின் பாதுகாப்பு, பறிபோய்க் கொண்டிருக்கின்றது. பயங்கரமானதொரு சூழலை நோக்கி, நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கும் நாட்டைப் பாதுகாக்க, அனைவரும் அணி திரளவேண்டும். ஒன்றிணைந்த எதிரணியின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.-என்றார். (எ)

# ஆதார வைத்தியசாலைகள் விரைவில் மத்திய அரசின் கீழ்

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, பெப்.21

நாடு முழுவதும் உள்ள ஆதார வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட உள்ளன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைகளால் நிர்வகிக்கப்படும் ஆதார வைத்தியசாலைகளின் தொழிலாளர் பற்றாக்குறை, நிதிப் பிரச்சினைகள் உள்ளிட்டவை காரணமாக ஆதார வைத்தியசாலைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வைத்தியசாலையில் சேர்க்கப்படும் கழிவுப் பொருள்களை முகாமைத்துவம் செய்யும் இந்தத்திட்டம் கொழும்பு வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டம் உள்நாட்டு நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, ஏனைய வைத்தியசாலைகளில் இந்தத் திட்டம் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றால் முன்னெடுக்கப்பட உள்ளது.- என்றார். (எ)

### நாளை

22.02.2017
புதன்கிழமை
நட்சத்திரம்: [illegible] பி.இ 5.00 வரை
திதி: [illegible] மு.இ 8.02 வரை
சுபநேரம் : 5.01 – 6.31 வரை
இராகுகாலம் : 12.31 – 2.01 வரை

# முறையற்ற விதத்தில் நடந்துள்ள மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம்

## கொதிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

முறையற்ற மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம், நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தலானது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தனியார் சட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த ராமநாதன் கண்ணன் என்ற சட்டத் தரணி, மேல் நீதிமன்ற நீதிபதியாக் நியமிக்கப் பட்டமைக்கு நீதிச் சேவைச் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்த விடயம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-



உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளாக நியமனம் பெறுவோர் நீதிச் சேவையின் தரங்கள் ஊடாக அல்லது குறைந்தது சட்டமா அதிபர் திணைக்களத்திலேனும் பணியாற்றியிருக்க வேண்டும்.

இந்தப் பதவி உயர்வு கட்டமைப்பு, பணி அனுபவம் மற்றும் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் காணப்படுகிறது.

கடந்த அரசுகள் மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மாத்திரமே தனியார் சட்ட நிறுவனங்களில் பணியாற்றும் சிறந்த உறுப்பினர்களை உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமித்தன. முன்னாள் உயர் நீதியரசர்களான நெவில் சமரக்கோன் மற்றும் மார்க் பெர்னாண்டோ ஆகியோர் அவ்வாறே நியமிக்கப்பட்டனர்.

நான் ஜனாதிபதியாக பதவி வகித்த ஒன்பது வருடங்களில் ஒரு தடவை மாத்திரமே உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு தனியார் சட்டத் துறையைச் சேர்ந்த ஒருவரை நியமனம் செய்துள்ளேன். எனது ஆட்சிக் காலத்தில் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கோ மேல் நீதிமன்றத்துக்கோ தனியார் துறையைச் சேர்ந்த சட்டத்தரணியை நியமிக்கவில்லை.

மேல் நீதிமன்ற நீதிபதியாக ராமநாதன் கண்ணனை நியமிக்குமாறு அரசியல் கட்சியொன்று கோரியதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

எனினும் அந்த கோரிக்கை முன்னர் நிராகரிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

நீதிபதியொருவரை நியமிக்குமாறு அரசியல் கட்சியொன்று பரிந்துரை செய்கின்றமை நீதித்துறையின் சுயாதீனத் தன்மையைத் தகர்க்கும் நடவடிக்கை.

நீதித்துறையின் பல மூத்த உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள அதிகாரிகளைப் புறந்தள்ளி கண்ணன் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் நீதிபதியொருவரை நியமிக்க வேண்டுமாயின் மூத்த நீதிபதிகள் உள்ளனர் என்று நீதிச் சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் பரிந்துரையின் அடிப்படையில் கண்ணன் நியமிக்கப்பட்டார் என்று பொது நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். அவ்வாறான பரிந்துரையை தாம் செய்யவில்லை என்று இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் செயலாளர், நீதிச் சேவை சங்கத்துக்கு அறிவித் துள்ளது. - என்று மஹிந்த தெரிவித்துள்ளார். (ஐ)

## விழுந்தாலடியில் விபத்து சாரதிக்கு மறியல்



நெல்லியடி,பெப்.21

குஞ்சர் கடை விழுந்தாலடியில் இடம்பெற்ற விபத்தில்சம்பந்தப்பட்ட வாகனச் சாரதியை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிபதி பா. சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

சனிக்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் மற்றையவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்துடன் சம்பந்தப்பட்ட இரு சக்கர உழவு இயந்திர சாரதியை அன்றைய தினமே கைது செய்து பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். இவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-40)

## திருக்கேதீஸ்வரம் செல்ல ஆசனப் பதிவுகள் செய்யலாம்

மந்திகை,பெப்.21

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவைகள் நடைபெறவுள்ளன.

ஆசனப் பதிவு செய்து கொள்வோர் பருத்தித்துறை டிப்போவில் பதிவை மேற்கொள்ளலாம் என்று சாலை முகாமையாளர் கே.கந்தசாமி அறிவித்துள்ளார்.

அன்றையதினம் அதிகாலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை பயணிகளின் வருகைக்கு ஏற்ப பஸ்சேவைகள்நடத்தப்படவுள்ளன.



இதற்கான ஆசனப் பதிவுப் பணிகள் பருத்தித்துறை டிப்போவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் முகாமையாளர் கூறினார். (ஐ-40)

## சட்டவிரோத மண் அகழ்வு ஹன்ரர் பொலிஸார் வசம்

நெல்லியடி, பெப்.21

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ் வில் ஈடுபட்டிருந்த ஹன்ரர் வாகனம் ஒன்றை மீட்டுள்ளனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸார் ரோந்து சென்று கொண் டிருந்த போது வல்லிபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த ஹன்ரர் வாகனம் ஒன்றை நிறுத்த முற்பட்டபோது வாகனத்தை விட்டு சாரதி தப்பி ஒடியுள்ளார். இந்த நிலையில் ஹன்ரர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ-40)

## 50 மதுபோத்தல்களுடன் வரணியில் ஒருவர் சிக்கினார்!

கொடிகாமம், பெப்.21

போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானத்தைச் சட்ட விரோதமாக விற்பனை செய்து கொண்டிருந்த ஒருவரை 50 மதுபானப் போத்தல் களுடன் மடக்கிப் பிடித்தனர் கொடிகாமம் பொலிஸார்.



நேற்று முன்தினம் ஞாயிறு நண்பகல் வேளை கொடிகாமம் பொலிஸ் இரகசியப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வரணி கறுத்தப் பெருமாள் பகுதியில் வைத்து 180 மி.லீ கொண்ட 50 மதுபானப் போத்தல்களுடன் ஒருவரைக் கைது செய்துள்ளனர். சந்தேக நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய் துள்ளதுடன் நாளை 22ம் திகதி சாவகச்சேரி நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-23)

## இதழ் வெளியீடு

'நிமிர்வு' இதழ் அறிமுக வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்

வருடாந்தப் பொதுக் கூட்டம்
05-03-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணி
சபாலிங்கம் கேட்போர் கூடம், யாழ். இந்துக் கல்லூரி

- வருடாந்தப் பொதுக் கூட்டம்
- புதிய செயற்குழுத் தெரிவு (தேர்தல் மூலம்)
- பிறவிடயங்கள்

அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்...!

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 27-02-2017இற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்கவும்

19-02-2017
யாழ்ப்பாணம்

த.சிவரூபன்
செயலாளர்



மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm


| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 95 \| வே<br>1978 \| நீர்கொழும்பு\| 173 cm<br>Assistant Manager \| இலங்கை<br>திருவோணம் (மகரம்) \|கிறிஸ்தவம் | 3769 \| கோ<br>1973 \| மல்லாகம் \| 167 cm<br>IT Manager \| இலங்கை<br>உத்தராடம் (தனுசு) \| கி.பா: 20. |
| 3827 \| ப<br>1981 \| அல்வாய் \| 160 cm<br>Development Officer \| இலங்கை<br>பூசம் (கடகம்) \|கி.பா: 60 \| சூரி செவ்: 8 | 3770 \| கோ<br>1973 \| மல்லாகம் \|165 cm\|Divorced<br>Std-Manag. Accounting \|இலங்கை<br>உத்தராடம் (தனுசு) \|கி.பா: 22 |
| 3868 \| வே<br>1976 \| உடுவில் \| 175 cm\|இலங்கை<br>Management Assistant\|கி.பா: 22<br>திருவாதிரை (மிதுனம்) \| சூரி செவ்: 11 | 5977 \| வே<br>1982 \| தெல்லிப்பளை \| 161 cm<br>Accountant \| இலங்கை<br>உத்தராடம் (தனுசு) \|கி.பா: 22 \|செ:2 |
| 3761 \| வே<br>1980 \| கொழும்பு \| 152 cm<br>Accountant \| இலங்கை<br>கிறிஸ்தவம் | 7379 \| வே<br>1989 \| புங்குடுதீவு \| 168 cm<br>Teacher \| இலங்கை<br>கேட்டை (விருச்சிகம்) \| கி.பா: 168 |
| 7497 \| வி<br>1981 \| நயினாதீவு \| 168 cm<br>Carpenter \| இலங்கை<br>உத்தரம் (கன்னி) \|கி.பா: 20 | 5698 \| கு<br>1978 \| சங்கானை \| 168 cm<br>Teacher\| இலங்கை<br>திருவோணம் (மகரம்) \|கி.பா: 25 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# உவர்மலையில் பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

## சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படாததைக் கண்டித்து



திருகோணமலை,பெப்.21

திருகோணமலையில் ஆசிரிய நியமனப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு நியமனம்வழங்கப்படாததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்த அதேசமயம், தெரிவு செய்யப்பட்ட 222 பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வும் அதே இடத்தில் நடைபெற்றது. நேற்றுத் திங்கட்கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பட்டதாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

அதேசமயம் கல்லூரியின் உள்ளே நியமனம் வழங்கும் நிகழ்வு நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கையில்:-

கிழக்கு மாகாணத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய நியமன இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் பட்டதாரிகளுக்கு பரீட்சை நடத்தப் பட்டது. இந்தப் பரீட்சையில் 5ஆயிரத்து 700 பட்டதாரிகள் தோற்றியிருந்தனர். அதில் 305 பட்டதாரிகள்சித்தியடைந்த நிலையில், 270 பேருக்கு மட்டுமே நேர்முகத்தேர்வு நட்த்தப் பட்டது.

எனினும் இந்த 270 பேரில் 222 பட்டதாரிகளுக்கு மட்டுமே நியமனம் இன்று வழங்கப்படுகின்றது. சித்தியடைந்த அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

2013 ஆம் ஆண்டுக்கான நியமன இடைவெளியை பூர்த்தி செய்வதற்கே இந்த நியமனம் வழங்கப்படுகிறது. அதன் பின்னரான 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான நியமன இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. - என்றனர். (ச)

### மாலைதீவில் மீட்கப்பட்ட மீனவர் நாடு திரும்பினர்

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமற் போய் மீட்கப்பட்டிருந்த கல்முனையைச் சேர்ந்த மீனவர்கள் ஐவர் சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் நேற்றுத் திங்கட்கிழமை நாடு திரும்பினர்.

ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி 2 இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்காக கடலுக்கு சென்றிருந்த ஆறு மீனவர்களும் படகுகளுடன் காணாமற் போயிருந்தனர்.

இவர்கள் மாலைதீவு கடற்பரப்பில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நிலையில் அந்நாட்டு கடற்படையினரால் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

மற்றையவர், படகுகளைக் கொண்டு வருவதற்காக மாலைதீவில் தங்கியிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட நால்வருக்கும் தொடர்ந்து எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா முன்னிலையில் நேற்றுத் திங்கட்கிழமை இவர்களை ஆஜர்படுத்திய போதே மேற்கண்ட உத்தரவை அவர் பிறப்பித்தார். (ச)

# மூன்று லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளுடன் நால்வர் கைது!



மட்டக்களப்பு,பெப்.21

தொப்பிகல பகுதியை அண்மித்த அரச வனப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான 18 தேக்குமரக் குற்றிகளுடன் நான்கு பேரை நேற்று திங்கட்கிழமை அதிகாலை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த மரக்குற்றிகள் நரக்க முல்ல அரச வனப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட நிலையிலேயே கைப்பற்றப் பட்டன.

மரக்குற்றிகளை ஏற்றிய வாகனம் புல்லுமலை வட்டாரவனவளதிணைக் களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# முறக்கொட்டாஞ்சேனையில் மனித எச்சங்கள்; ஆய்வு நடவடிக்கைகளில் நிபுணர்கள் குழு!



மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் பகுதியில் மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட தடயங்கள்காணப்பட்ட இடத்தை சட்டமருத்துவநிபுணர்கள் துறைசார் குழுவினர் நேற்றுத் திங்கட்கிழமை நேரில் சென்று ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன் போது அந்த இடத்திலிருந்து மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்படும் தடயப் பொருள்கள்மீட்கப்பட்டன. மீட்கப் பட்டபொருள்கள்கொழும்புக்கு அனுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளனஎனஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட வைத்திய நிபுணர் எம்.சிவசுப்பிரமணியம், சட்டவைத்திய நிபுணர் பி.சி.சுரங்க பெரேரா, வைத்தியநிபுணர் அசித்த கீர்த்தி ஆகியோர் அடங்கிய விஷேட குழுவினர் அகழ்வுகளை மேற்கொண்டனர்.

1990 ஆம் ஆண்டு முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகட்டடத்திலும் அதன்அருகிலுள்ளகாணிகளை உள்ளடக்கிய தாக இராணுவமுகாம் அமைக்கப்பட்டிருந்தது. தனியாருக்குச் சொந்தமானகாணிகள் போருக்குப் பின்னர் 2014 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டு உரிமையாளர்களிடம்கையளிக்கப் பட்டிருந்தன.

இந்நிலையில், முகாமுக்கருகிலுள்ளகாணியொன்றின் உரிமையாளர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மலசலகூடம் அமைப் பதற்கான குழியை வெட்டிய போது, மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்படும் தடயங்கள் காணப்பட்டன. இதனைஅடுத்து, ஏறாவூர்ப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### ஓட்டோ விபத்தில் மூவர் படுகாயம்!

மட்டக்களப்பு, பெப்.21

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவில் உள்ள களுதாவளைக் கிராமத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஓட்டோ ஒன்று மதிலுடன் வேகமாக மோதி விபத்துக்குள்ளானதில்,ஓட்டோசாரதி உட்பட மூவர் படுகாமடைந்தனர்.

இந்த விபத்தில் திசான் (வயது- 19), மதுசாங்க (வயது- 31), பண்டார (வயது- 38) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

ஓட்டோ சாரதி மது போதையுடன் இருந்த தன் காரணத்தாலேயே இந்தவிபத்து ஏற்பட்டுள்ளது. உள்ளே இருந்த பயணிகள் இருவரும் கூட மது போதையில் காணப்பட்டார்கள் என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் காரியாலயம் திறந்து வைப்பு





தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அம்பாறை மாவட்டம் உஹணை பிரதேச பொறியியலாளர் காரியாலயம், பறகஹாகலே நிலைய பொறுப் பதிகாரி காரியாலயம் என்பனவற்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

3 ஆம் கட்ட நீர் வழங்கல் திட்டம் மூலம் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மொனராகல மாவட்டங்களில் சில பகுதிகள் உட்பட 40 ஆயிரம் நீர் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் 2 லட்சம் குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் பைசால் காசீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம். மன்சூர், சிறியானி விஜய விக்ரம, கிழக்கு மாகாண அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மஞ்சுள பெர்ணாந்து, ஆரிப் சம்சுதீன், கல்முனை மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் அப்துல் மஜீத், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர், முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மன்சூர் ஏ. காதிர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

# அபிவிருத்தி செயற்பாடுகளின்போது ஒன்றிணைந்து செயற்படவேண்டும்!

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு,பெப்.21

அபிவிருத்தி செயற்பாடுகளின்போது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெலிகம நகர சபைக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தென் மாகாண அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இத தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்னர் நாம் மாறவேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளை அரசசேவையிலும் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்த அரச அதிகாரிகள் தயாராக வேண்டும்.

பாரம்பரிய அரசியல் கலாசாரம் மற்றும் எண்ணங்களிலிருந்து விடுபட்டு அனைவரும் நாட்டின் நலன்கருதி திறந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.

அரச சொத்துக்கள் மற்றும் வளங்களின் பயன்பாட்டின் போது தமது நிறுவனத்தின் சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்தாக கருதி சில நிறுவனத்தின் தலைவர்கள் செயற்படுகின்றனர்.

அதேவேளை நிறுவனங்களுக்கிடையே காணப்படும் போட்டித்தன்மை காரணமாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கு எந்தவித பாதிப்புக்களும் ஏற்படக் கூடாது.

ஊடகச் செயற்பாடுகளின் போது வர்த்தக நோக்கம் மற்றும் ஜனரஞ்சகத் தன்மையைக் கருத்திற்கொண்டு எதிர்மறையான செய்திகளை மாத்திரம் வெளியிடும் வகையில் செயற்படாது நாட்டைப் பற்றி சிந்தித்து செயற்படுவதற்கான பொறுப்பு ஊடகங்களைச் சார்ந்ததாகும். அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் பிரிவினை நாட்டின் எதிர்காலச் செயற்பாட்டுக்கு தடையாகும்.



அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் ஊக்கப்படுத்துவதற்காக நாட்டின் உண்மையான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் பொறுப்பு சகல ஊடகங்களுக்கும் வழங்கப்படுகிறது.- என்றும் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளில் அரச அதிகாரிகளின் பின்னணி தொடர்பில் தென் மாகாண அரச அதிகாரிகளைத் தெளிவுபடுத்துவதற்காக இந்த கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில், '2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற வலுவூட்டப்பட்ட இலங்கையை உருவாக்குவதில் அரச அதிகாரிகளின் செயற்பணியும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்' எனும் தொனிப்பொருளில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் சிரேஷ்ட விரிவுரையாளர் சுனில் ஜயந்த நவரத்னவால் சிறப்பு விரிவுரை ஆற்றப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தென் மாகாண அரச அதிகாரிகளின் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதிக்கு பரிசு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில், தென் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, தென் மாகாண அமைச்சர்களான யு.ஜீ.டீ. ஆரியதிலக, எச்.டபிள்யு. குணசேன, சந்திமா ராசபுத்ர, வீரசுமண வீரசிங்க ஆகியோர் உள்ளிட்ட தென் மாகாணசபை உறுப்பினர் களும், அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைப்பொம்மையல்லவே!

### *மேல் மாகாண முதலமைச்சர் கூறுகிறார்*

கொழும்பு,பெப்.21

அரசியலமைப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தீர் மானங்கள் அனைத்துக்கும் தலையாட்டுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கைப்பொம்மையல்ல என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்புப் திருத்தம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனாலும், புதிய அரசமைப்பு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியே கூடுதலாக கருத்துக்களை முன்வைத்துள்ளது. இந்த திருத்தங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துரையாடிய பின்னரே ஓர் தீர்மானத்துக்கு வர இருக்கின்றது.

என்றாலும், புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றிக் கொள்வோம் என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அண்மையில் தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவதற்கு அவர்களின் கைப்பொம்மையல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கத்துக்கு இணங்காவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியமைக்க முடியாமல் போயிருக்கும்.



மேலும், கடந்த பொதுத் தேர்தலில் எந்த கட்சிக்கும் ஆட்சியமைப்பதற்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அதனால் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவே நாங்கள் அரசாங்கத்தில் இணைந்திருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்தில் மக்களின் தேவையை நிறைவேற்ற முடியாவிட்டால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கும் எந்தத் தடையும் எங்களுக்கு இல்லை.

அதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தில் இருப்பதற்காக மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய மற்றும் நாட்டுக்கு விரோதமான எந்தத் தீர்மானத்துக்கும் ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் பெண் மீது பாலியல் துன்புறுத்தல்; திருப்பி அனுப்பப்பட்டார் இலங்கை இராணுவ மேஜர்!

கொழும்பு,பெப்.21

இலங்கை அரசால் சிறப்புப் பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட மேஜர் தர அதிகாரி ஒருவர், அங்கு பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டை அடுத்து நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற இந்த மேஜர் தர அதிகாரி அமெரிக்காவில் சிறப்புப் பயிற்சிக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இரு அதிகாரிகளும், மூன்று இராணுவ அதிகாரிகளும் இந்தப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

ஹவாயில் பயிற்சி பெற்று வந்தபோது, கடந்த 9ஆம் திகதி, விடுதி அறையில் தொழில்நுட்ப சீரமைப்பு பணிக்காகச் சென்ற பெண் ஒருவரை, இலங்கை மேஜர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார்.

இதையடுத்து, அமெரிக்க பொலிஸாரால் இந்த அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் இவர் ஹவாய் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போது, உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் கடித மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலருக்கு கடந்த வாரம், அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இந்த மேஜர் தர அதிகாரி, கடந்த சனிக்கிழமை இரவு, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரை, தற்காலிகமாக பணியில் இருந்து இடைநிறுத்தியுள்ளோம் என்றும் துறைசார் மட்டத்தில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

ஏனைய அதிகாரிகள் நால்வரும் தொடர்ந்தும் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பெரும் அச்சத்தில் கோட்டாபய ராஜபக்ஷ; சட்ட நிபுணர்களுடன் அவசர ஆலோசனை!

கொழும்பு,பெப்.21

தி நேசன் இதழின் இணை ஆசிரியர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டதையடுத்து, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ சட்டவாளர்களுடன் அவசர ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு நடந்த இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக, கடந்த சனிக்கிழமை மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்ட தகவல் கிடைத்ததும், தனக்கு நெருக்கமான சட்டவாளர்களுடன் கோட்டாபய ராஜபக்ஷ அவசர ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

அலி சப்ரி, காலிங்க இந்திர திஸ்ஸ, அசித் சிறிவர்த்தன ஆகிய சட்டவாளர்களுடனேயே கோட்டாபய ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

எந்த நேரத்திலும் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இருந்து, தமக்கு விசாரணைக்காக அழைப்பு விடுக்கப்படலாம் என்ற அச்சத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷ சட்ட நிபுணர்களுடன் இந்த ஆலோசனையை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலிலிருந்து ஜே.வி.பியை ஓரங்கட்டுவதற்கு அரசு முயற்சி



## கட்சியின் தலைவர் அனுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21
ஜே.வி.பியை அரசியலிலிருந்து ஓரம்கட்டுவதற்கு அரசு முயல்கின்றது என்று கட்சியின்தலைவர்அனுரகுமார திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலத்த பகுதியில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

புதிய தேர்தல்முறை ஒன்றின் ஊடாக ஜே.வி.பியை அரசியலிலிருந்து ஓரம் கட்டுவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்களால் நிராகரிக்கப்பட்டு வருகின்றன.

ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரை இந்த இரண்டு கட்சிகளும் பாதுகாத்துவருகின்றன. எனவே ஜே.வி.பி மீது மக்கள் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவற்றுக்கு ஜே.வி.பி பெரும் தலைவலியாக அமைந்துள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் கட்சிகளுக்கு எதிராகக் காணப்படும் ஜே.வி.பி. மக்களுக்கு நலன்களையே வழங்கி வருகின்றது.

கலப்பு முறையிலான தேர்தல் அறிமுகம் செய்யப்படுவதற்கான பிரதான காரணம் ஜே.வி.பியைஅரசியலிலிருந்து ஓரம் கட்டும் நோக்கிலாகும்.

இந்தக் கலப்பு முறையிலானபுதிய தேர்தல்முறைமை பலகட்சி அரசியலுக்குப்பெரும் தலையிடியாகஅமைந்துள்ளது. இந்த முறையை ஜே.வி.பி. எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளாது.-என்றார். (எ)

# மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் 30 வீதமானோருக்கு மந்த போசனை

## விதுர விக்கிரமநாயக்க எம்.பி.கூறுகிறார்



பதுளை, பெப்.21
மலையகப் பெருந் தோட்டப் பகுதிகளில், 30 சதவீத மானவர்கள் மந்த போசனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிரணியின் பதுளை மாவட்டக் கூட்டம், பதுளை, வெலிகம விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டு மக்கள், பசி, பட்டினியுடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. உலகிலேயே, மிக மோசமான ஆட்சியாளர்களால் ஆட்சி செய்யப்படும் நாடாக, இலங்கை காணப்படுகின்றது.

இந்தநாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு, எம் ஒவ்வொருவருக்கும் இருந்து வருகின்றது. எனவே, 'நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, ஆட்சி செய்தது போதும் வெளியேறு' என்று, இன்றைய ஆட்சியாளர்களிடம் கூற வேண்டும்.- என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 21.02.2017

துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 9 ஆம் நாள் தசமி மாலை 6.45 வரை. பின்ஏகாதசி. மூலம் பின்இரவு 3.17 வரை. பின் பூராடம். அமிர்தசித்த யோகம் முழுவதும். ராகுகாலம்: மாலை 3.21 முதல் 4.50 வரை. சுபநேரம்: பகல் 10.56 முதல் 12.26 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசி மாத தேய்பிறை தசமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். தற்காலிக வேலையிலுள்ளவர்களுக்கு வேலை நிரந்தரமாக்கப்படும். வேலை செய்யும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** யோசனையான நாள். உடல்நிலை பாதிப்படையும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். தொழில் செய்யுமிடத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் பணியாளர்களிடம் ஒற்றுமையின்மையும், உறவுகளில் சர்ச்சைகளும் உண்டாகும்.

**கடகம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. உறவினர்கள் பகைமையை மறந்து இணைவார்கள். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். பலவழிகளாலும் பணம் வந்துசேரும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்பு கிட்டும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். மனதில் ஒருவித குழப்பம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், மனநிம்மதியும் கெடும்.

**துலாம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பிரயாசை அதிகரிக்கும். எடுக்கும் காரியங்கள் தாமதமடையும்.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். நினைத்தவை நிறைவேறும். வேலைதேடித் திரிந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**தனுசு:** நன்மையான நாள். சிலர் சொந்த வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்வார்கள். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**மகரம்:** தீமையான நாள். நண்பர்கள், உறவினர்களால் உபத்திரம் உண்டாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரிடும்.

**கும்பம்:** இனிமையான நாள். நினைப்பவை நிறைவேறும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும்.

**மீனம்:** விருத்தியான நாள். வியாபாரம் பன்மடங்கு விருத்தியடையும். செய்யும் தொழிலில் முன்னேற்றமடைவார்கள். கொடுக்கல்,வாங்கல் சரளமாக நடக்கும்.

சந்திராட்டம்நாள்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இத்தினத்தில் சுப கருமங்களைத் தவிருங்கள்.

# கட்டுகுருந்த கடலில் இடம்பெற்ற படகு விபத்துக்கு ஜனாதிபதி இரங்கல்

கொழும்பு, பெப்.21
களுத்துறை கட்டுகுருந்த கடல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படகு விபத்துத் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

விபத்து ஏற்பட்டவுடனேயே அந்தத் தரப்பினருடன் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்திய ஜனாதிபதி, விபத்துக்குள்ளானவர்களை மீட்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கடற்படையினருக்கும் பொலிஸாருக்கும் ஆலோசனைவழங்கியிருந்தார்.

அத்துடன் விபத்துக்குள்ளானவர்களுக்குத்தேவையான சிகிச்சை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த விபத்தில் மரணமடைந்தவர்களது குடும்பத்தினருக்குத்தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் அனைவரும் விரைவில் குணமடையப் பிரார்த்திப்போம்-என்றார். (எ)

# அரசியலில் மலையக பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவே!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



மலையகத் தொழிற் சங்கத்தைக்காப்பவர்கள் பெண்களாக இருக்கின்ற போதிலும், அவர்கள் அரசியலில் பங்களிப்புச் செய்வது குறைவாகவே காணப்படுகின்றது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மறைந்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வி அனுசா தர்சினி சந்திரசேகரனுக்கு வரவேற்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் தலவாக்கலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டுபேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அனுசா தர்சினி சந்திரசேகரன், தந்தை பயணித்த பாதையில் தாம் பயணிக்க உள்ளார் என்று குறிப்பிட்டார். (எ)

# பொலன்னறுவையில் நீதிமன்றக் கட்டடம் அடிக்கல் நடும் நிகழ்வு பெப்.25 இல்

பொலன்னறுவை, பெப்.21
ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கு அமைய சுமார் 382 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை புதிய நீதிமன்றக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனதலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டத்தைச்செம்மைப்படுத்தும் காரியத்தை திறனாக மேற்கொண்டு பொதுமக்களுக்கு அனுகூலமான சேவையை மேற்கொள்ள இந்தச் செயற்றிட்டம் உதவும்.

மேலும், பொலன்னறுவை நீதிமன்ற அலுவலகங்களில் இருந்த இடப்பிரச்சினைக்கு இதன்மூலம் தீர்வு வழங்கப்படும்.

நாட்டில் உள்ள நீதிமன்றக் கட்டடங்களில் தற்போது நிலவும் இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கும் திட்டத்தின் ஒருகூட்டமாகவே பொலன்னறுவ நீதிமன்றம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# இறக்குமதி அரிசிக்கு வரி குறைக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏதும் வராது

## நிதி அமைச்சர் கருணாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, பெப்.21
இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் மீதான வரி குறைக்கப்பட்டதால்உள்நாட்டு விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று நிதிஅமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டிய அதேநேரம், விவசாய சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மட்டக்குளி கல்யாணி கங்காராம விகாரையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரிசி இறக்குமதி வரியை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தமை காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது.

இதேவேளை, வர்த்தகர்கள் பழைய விலைகளிலேயே அரிசியை விற்பார்களாயின் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (எ)

வழிமூலம் - The island
ஆங்கிலத்தில் - Merril Gunaratne
மொழியாக்கம் - நித்தியபாரதி

# ஈழப்போரில் ஜே.ஆரின் குள்ளநரித்தனம்!

அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பின் (சி.ஐ.ஏ.) ஆவணத்தின் பிரகாரம், 'யாழ்ப்பாணத்தை' கட்டுப்பாட்டில் கொண்டு வருமாறு கட்டளையிட்ட போதும் இலங்கை இராணுவத்தினர் இரண்டு தடவைகள் தனது கட்டளையை நிராகரித்தமையின் காரணமாக இந்தியாவின் தலையீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானது என்று 1988 பெப்ரவரியில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜ தந்திரியிடம் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகிறது.

ஆனாலும், இந்தியாவின் தலையீடு வேறுபட்டதொரு சந்தர்ப்பத்திலேயே இடம்பெற்றது என்பதே உண்மையாகும்.

### இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணி

ராஜீவ் காந்தி இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்ற போது இலங்கையில் நிலவிய தீவிரவாத செயற்பாடுகள் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட்டது. இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்தார் அப்போது, தமிழ் ஆயுதக் குழுக்கள் இந்தியாவின் தமிழ்நாட்டைத் தமது 'பாதுகாப்பு அரணாக' பயன்படுத்துவதற்கு அனுமதியளித்திருந்தார்.

புதுடில்லி மற்றும் சென்னை அரசுகளின் அரசியல் செல்வாக்குடன் தமிழ் ஆயுதக் குழுக்கள் தமக்கான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டன. அத்துடன், இவர்களுக்கான ஆயுதங்களும் நிதி உதவிகளும் தமிழ்நாட்டின் முன்னணி அரசியல் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.முகவால் வழங்கப்பட்டன.

இவ்வாறான ஆதரவுடன் தமிழ் நாட்டில் தங்கியிருந்த தமிழ் ஆயுதக் குழுக்கள் தமக்கான அரசியல், இராணுவ, பரப்புரை, தொடர்பாடல்கள், பௌதிக அலுவலகங்கள் மற்றும் தளங்கள் போன்றவற்றை சென்னையில் விரிவாக்கிக் கொண்டன. பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்தி தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கான நகர்வுகளை முன்னெடுப்பதிலும் இந்திய மத்திய அரசு தயக்கம் காண்பித்தது.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. 'இந்தியாவில் நிலவிய சாதகமான காரணி' இவ்வாறான இழப்புக்களை ஈடுசெய்வதற்குப் பெரிதும் உதவியது. இலங்கைப் படைகளின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் புலிகள் அமைப்புதமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தது. இதனால் இவர்களை இலங்கைப் படையினர் முற்று முழுதாக ஒழிக்க முடியவில்லை. இதனால் இலங்கைப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வகையில், இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்குப் புலிகள் அமைப்பினரே பொறுப்பாளிகளாக இருந்தனர்.

ராஜீவ் காந்தி இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது இந்தியாவில் பயங்கரவாதிகளுக்குதஞ்சம் கொடுக்கும் கோட்பாட்டை முற்றிலும் மாற்றியமைத்தார். ஆகவே, தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஆயுதக் குழுவினருக்கு இலங்கை அரசு அரசியல் சார் விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றை ராஜீவ் காந்தி முன்வைத்தார். அத்துடன், தான் ஒருபோதும் தமிழ் ஆயுதக் குழுவினர் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுவதற்கு அனுமதியளிக்க மாட்டேன் எனவும் ராஜீவ் காந்தி உறுதியளித்தார்.

அத்துடன், தமிழ் ஆயுதக் குழுவினர் பேச்சுகளுக்கு வருவதற்கான உந்துதலையும் ராஜீவ் காந்தி வழங்கினார்.

இது தொடர்பாக, இலங்கையின் அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி 1985 இன் ஆரம்பத்தில் இந்தியாவுக்குப் பயணம் செய்தபோது கூறப்பட்டது. இது தொடர்பில் எட்டப்பட்ட அரசியல் கட்டமைப்பு பல்வேறு சிக்கல்களின் மத்தியிலும் திம்பு பேச்சு தொடக்கம் 1987 ஜூலை மாதம் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரையான இலங்கையின் அரசியலில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்த உதவியது.

ஜூலை 1987 உடன்படிக்கை அமைச்சர் காமினி திசநாயக்கவின் சிந்தனையாகக் காணப்பட்டது. அத்துலத்முதலி எதனைக் கருத்தில் கொண்டு இந்த உடன்படிக்கை ஆரம்பித்தாரோ அதற்கு முற்றிலும் வேறுபட்ட வகையிலேயே இந்த உடன்படிக்கை காமினி திசநாயக்கவால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

### கொழும்பு, புதுடில்லி இரு தரப்பு நலன்கள்

இலங்கையின் எல்லைக்கு வெளியே அதாவது தமிழ்நாட்டில் தமிழ் ஆயுதக் குழுக்கள் தஞ்சம் புகுந்திருந்தமையால் இவர்களை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் முற்றிலும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத சூழல் காணப்பட்டது. ஆகவே இந்த ஆயுதக் குழுக்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதன் மூலம் மட்டுமே இவர்களைத் தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்று அதிபர் ஜே.ஆர் கருதினார்.

இதற்கு இந்திய-இலங்கை உடன்படிக்கை இவருக்கு தேவைப்பட்டது. அந்த நேரத்தில் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் ஊடாகத் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய மத்திய அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தனர். இதற்கு அகதிகள் நிர்க்கதியாக உள்ளமை போன்ற விடயங்கள் பயன்படுத்தப்பட்டன.


இந்த நிலையில் பயங்கரவாதிகளுக்குச் சார்பான 'இந்தியக் காரணியை' இல்லாதொழிப்பதற்கு ராஜீவ் காந்தி விரும்பினார். இதற்காகவே இவர் புதுடில்லியால் முன்வைக்கப்பட்ட அரசியல் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தார். அத்துடன் இந்தியாவிலிருந்து தமிழ்ப் பயங்கரவாதக் குழுக்களைப் பிரிக்க வேண்டும் எனவும் ஜே.ஆர். கருதினார்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்தமது அரசியலில் முதன்மைப் படுத்திய தமிழ் நாட்டு அரசியல்வாதிகளைச் சமாதானப்படுத்துவதற்கு அரசியல் தீர்வொன்று அவசியமானது என்பதால் புதுடில்லி அரசியல் கட்டமைப்பொன்றைப் பரிந்துரைத்தது.

> புலிகளின் நகர்வை தனது படைகளால் முறியடிக்க முடியவில்லை என்பது சரியானதே என்று ஜே.ஆர். தெரிவித்திருந்தார்

இலங்கையில் தனித் தமிழீழம் ஒன்றை அமைப்பதற்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியான கோரிக்கையை எதிர்ப்பதற்காகத் தன்னால் பரிந்துரைக்கப்பட்ட அரசியல் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதன் மூலம் தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் மத்திய அரசுக்கான தமது ஆதரவை விலக்கி விடுவோம் என்னும் அச்சுறுத்தலை இல்லாதொழிக்க முடியும் எனவும் புதுடில்லி கருதியது.

ஆனாலும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக வெளியேறியமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இந்திய மத்திய அரசு தீர்வை எட்டவில்லை என்று தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் குற்றம்சாட்டினர்.



தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தனித் தமிழீழக் கோட்பாட்டைக் கைவிடாமையால், 1985இல் மேற்கொள்ளப்பட்ட திம்பு பேச்சு தொடக்கம் ஜூலை 1987 வரையான பேச்சுகள் வெற்றியளிக்கவில்லை. இதன் காரணமாக இந்தியா மீதும் புலிகள் அமைப்பு மீதும் இலங்கை அரசு ஆத்திரமடைந்ததுடன் இதுவே இராணுவத் தாக்குதல்களுக்கும் வழிவகுத்தது.

இதுவே ஜெனரல் சிறில் ரணதுங்க 1987 ஆம் ஆண்டு மே மாதம் வடமராட்சி நடவடிக்கையை மேற்கொள்ள வழிவகுத்தது. இதற்கு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமை வகித்தார்.

### வடமராட்சி தாக்குதல் நடவடிக்கைக்குப் பின்னர்

வடமராட்சியில் பெரிய தாக்குதல் நடவடிக்கை இடம்பெற்ற பின்னர், யாழ்ப்பாணத்தை இழப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று புலிகள் கருதினர். இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக புலிகள் தமது 'இந்தியக் காரணியை' பயன்படுத்தி புதுடில்லி மீது அழுத்தம் ஒன்றைப் பிரயோகித்தனர். அதாவது இந்திய மத்திய அரசு இதில் தலையீடு செய்து உடனடியாக இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் இதற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் இலங்கையை விட்டு அகதிகளாக வெளியேறுகின்றமையைக் காரணமாகக் காண்பிக்குமாறு கூறப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தியா தனது விமானங்களில் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகளை வீசியது. இந்தியாவின் இந்தத் தலையீடு காரணமாக இலங்கை பலவந்தமாகத் தனது யுத்த முன்னெடுப்பை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தியா இதில் தலையீடு செய்யாதிருந்திருந்தால் இலங்கை யாழ்ப்பாணத்தை நோக்கிய தனது படை நடவடிக்கையை நிறுத்தியிருக்கமாட்டாது.

அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகளை நடத்துவதற்கு இலங்கை அரசு உடன்பட வேண்டிய நிலை உருவாகியது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா தனது படைகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிப் புலிகளின் நிலை தொடர்பாக அறிய ஆவலாக இருந்தது.

அதாவது, இந்தியா மற்றும் இலங்கை அரசுகளால் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வுக்குப் புலிகள் இணங்குகிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்தியா தனது படையினரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது. இதற்காக ஜூலை 29, 1987 இல் இந்திய - இலங்கை உடன்படிக்கை வரையப்பட்டு இதன் மூலம் இந்தியப் படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கை இராணுவத்தினர் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முயற்சித்த போதும் அது தோல்வியில் முடிவடைந்ததன் காரணமாகவே அதிபர் ஜே.ஆர். இந்தியாவின் தலையீட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது என்னும் கருத்து முற்றிலும் சரியானதல்ல. வடமராட்சி இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவடைந்ததன் காரணமாக, இந்தியத் தலையீடு இடம்பெற்றது என்பதே உண்மையான விடயமாகும். இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு புலிகள் தனது இந்தியக் காரணியை வெற்றிகரமாகப் பயன்படுத்தி இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக்கொண்டனர்.

புலிகளின் நகர்வை தனது படைகளால் முறியடிக்க முடியவில்லை என்பது சரியானதே எனவும் இது தனது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டது எனவும் இந்தியாவின் தலையீடு இருந்தமையால் இதனை முறியடிக்க முடியவில்லை எனவும் அதிபர் ஜே.ஆர். தெரிவித்திருந்தார்.

இந்தியப் படையினரை இலங்கைக்கு வரவழைப்பது உள்ளடங்கலான அரசியல் கட்டமைப்பின் மூலம் புலிகள் அமைப்பைத் தனது வழிக்குக் கொண்டு வந்து அரசியல் தீர்வொன்றை ஏற்றுக்கொள்ள வைக்கலாம் என்று ஜே.ஆர். நினைத்திருந்தார். ஆனால், சமரசங்கள் மற்றும் இராஜதந்திர நகர்வுகள் மூலமும் யுத்தத்தைத் தொடர முடியும் என்னும் நிலைப்பாட்டை ஜனாதிபதி ஜே.ஆர். உணர்ந்து கொண்டிருப்பார்.

ஜூலை 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கையே இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு வருவதற்குத் தூண்டலாக இருந்தமையை அதிபர் ஜே.ஆர். அறிந்து கொண்டார். இந்தியக் காரணியை அழிப்பதன் மூலம் புலிகளை இந்தியாவிடமிருந்து தனிமைப்படுத்தி, இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தத்தை ஏற்படுத்தலாம் என்று ஜே.ஆர். கணிப்பிட்டார்.

2001 இல் நான் எழுதிய 'Dilemma of an Island'' என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளேன். 'செப்ரெம்பர் 04, 1987 இல் நான் அதிபர் ஜே.ஆருடன் அவரது இல்லத்தில் சந்திப்பொன்றை மேற்கொண்டமையை நினைவில் கொள்கிறேன். அதாவது, புலிகள் அமைப்பு தனது ஆயுதங்களின் பெரும் பகுதியை இந்திய - இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 72 மணித்தியாலங்களில் கையளிக்காதமையின் மூலம் அவர்கள் இந்த உடன்படிக்கையை மீறியுள்ளனர் என நான் அதிபர் ஜே.ஆரிடம் தெரிவித்த போது, 'இது எனது பிரச்சினையில்லை, இது இந்தியாவின் பிரச்சினை' என அவர் பதிலளித்திருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)




பொன்.வேணு கிருஷ்ணா

**தேர்தலின் இறுதி மாதங்கள் முழுவதும், ஹிலாரி கிளிண்டன் மீண்டும் மீண்டும் ட்ரம்பை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினின் ஓர் அரசியல் கையாள் என்று தாக்கினார்**

இந்தப் பிரசாரம் தான் ஜனநாயகக் கட்சியினது முன்னீடுபாட்டின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. 2016 தேர்தலின் இறுதி மாதங்கள் முழுவதும், ஹிலாரி கிளிண்டன் மீண்டும் மீண்டும் ட்ரம்பை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினின் ஓர் அரசியல் கையாள் என்று தாக்கினார். அதேவேளையில் அவர் தன்னைத்தானே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிகவும் நம்பகமான பாதுகாவலாக சித்திரித்துக் கொண்டார்.

இந்தப் பிரச்சினை பின்னர் மீண்டும் தேர்தலுக்குப் பிந்தைய இடைமருவு காலத்தில், ட்ரம்பின் ஆச்சரியமான வெற்றிக்கு ''ரஷ்ய இணைய ஊடுருவல்'' தான் காரணம் என்ற வாதங்களுடன், உயர்த்தப்பட்டது. ட்ரம்ப் பதவியேற்றதற்குப் பின்னர், காங்கிரஸில் உள்ள ஜனநாயகக் கட்சியினர் மற்றும் செனட் குடியரசு கட்சியினரது ஒரு பிரிவினர் சி.ஐ.ஏ மற்றும் பென்டகனின் அரசியல் தாக்குமுகப்பாக செயல்பட்ட நிலையில், இந்தக் கருத்துரு மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸில் உள்ள ஜனநாயகக் கட்சியினர், வாட்டர்கேட் சகாப்த கேள்வியான, ''ஜனாதிபதிக்கு அது குறித்து என்ன தெரியும், அவருக்கு எப்போது தெரிய வந்தது?'' என்பதை உயர்த்துவதற்கு ஃபிளினின் இராஜினாமாவைப் பற்றிக் கொண்டனர். டிசெம்பர் 29 இல் கிஸ்லியாக்கிற்கு ஃபிளின் தொலைபேசியில் அழைத்த அன்றைய தினம்தான் ஜனாதிபதி ஒபாமா ரஷ்யா மீது புதிய தடையாணைகளை விதித்தார் என்ற நிலையில், ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நுழைந்ததும் அந்த தடையாணைகள் தளர்த்தப்படும் அல்லது முற்றிலுமாக நீக்கப்படும் என்பதற்கு ஃபிளின் அப்போது உத்தரவாதங்கள் வழங்கினார் என்பதே அவர்களின் வாதமாகும்.

**ட்ரம்ப் ஆதரவாளர்கள் ''ரஷ்யாவுடன் முறையற்ற உறவுகளைக் கொண்டுள்ளனர்'' மற்றும் இதற்கு ட்ரம்பே உடந்தையாய் இருக்கிறார் என்று அவர் அறிவித்தார்**



மிகவும் கடுமையான கருத்துக்கள், பிரதிநிதிகள் சபையின் உளவுத் துறைக்கான தேர்வுக் கமிட்டியின் ஓர் அங்கத்தவரான கலிபோர்னியாவின் எரிக் ஸ்வல்வெல்லிடம் (Eric Swalwell) இருந்து வந்தன. ட்ரம்ப் ஆதரவாளர்கள் ''ரஷ்யாவுடன் முறையற்ற உறவுகளைக் கொண்டுள்ளனர்'' மற்றும் இதற்கு ட்ரம்பே கூட உடந்தையாய் இருக்கிறார் என்று அவர் அறிவித்தார். ''காங்கிரஸில் குடியரசுக் கட்சியினருக்குப் பெரும்பான்மைகள் இருக்கலாம் மற்றும் அவர்களது வேட்பாளர்கள் வெள்ளை மாளிகையில் ஜெயித்து வந்திருக்கலாம், ஆனால், (ஜனநாயகக் கட்சியினர்) ஒன்றும் நிராதரவானவர்கள் கிடையாது,'' என்றார். ''எங்களோடும் அமெரிக்க மக்கள் இருக்கிறார்கள், ஜனாதிபதி நம்மோடு இருக்கிறாரா இல்லை ரஷ்யர்களோடு இருக்கிறாரா என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும் வரையில் அமெரிக்க மக்கள் திருப்தி அடையப் போவதில்லை'', என்றார்.

**ட்ரம்ப் ஒரு ரஷ்ய கையாள் என்று வாதிட்டு ஒரு மெக்கார்த்திய பாணியிலான பிரசாரத்தை நடத்த வாய்ப்பு**




மத்திய புலனாய்வு முகமையும் (CIA), தேசிய பாதுகாப்பு முகமையும் (NSA) மற்றும் பென்டகனின் பெரும்பான்மையினரும், ரஷ்யாவுடனான போர் தயாரிப்புகளில் பெரிய அளவில் மூலோபாய முதலீடுகளைச் செய்துள்ள அரசு எந்திரத்தின் சக்தி வாய்ந்த பிரிவுகளும், ஜனநாயகக் கட்சியினருக்கு பின்னால் இருப்பதால் அவர்கள் ஒன்றும் ''நிராதரவானவர்கள் இல்லை'' என்று அவர் கூறியிருந்தால், ஸ்வல்வெல் இன்னும் உண்மையானவராக இருந்திருப்பார்.

ட்ரம்பின் மந்திரிசபை நியமனங்கள் குறித்தும், அவர் வழங்கிய ஜனநாயக விரோத மற்றும் அரசியலமைப்பு விரோத உத்தரவாணைகள் குறித்தும், ஜனநாயகக் கட்சி சுயதிருப்தியோடு முடங்கி கொள்கிறது. இது ஏனென்றால், ட்ரம்ப் கொள்கையின் இத்தகைய கூறுபாடுகள் மீதான அவர்களது தந்திரோபாய விமர்சனங்கள் என்னவாக இருந்தாலும், இவ்விரு கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்யும் பெருநிறுவன மற்றும் நிதியியல் செல்வந்த அதிகார அடுக்கின் நலன்களுடன் அவை பொருந்துகின்றன. ஆனால் ட்ரம்ப் ஒரு ரஷ்ய கையாள் என்று வாதிட்டு ஒரு மெக்கார்த்திய பாணியிலான பிரச்சாரத்தை நடத்த வாய்ப்பு கிடைக்கையில், அவர்கள் வாயில் வந்ததைப் பேசி சண்டையில் இறங்குகிறார்கள்.

காங்கிரஸில் உள்ள குடியரசுக் கட்சியினரின் பிரிவுகளும், அத்துடன் ஜனநாயகக் கட்சியினரும், இந்த பிரச்சினையில் ட்ரம்பிடம் இருந்து தங்களைத் தாங்களே விலக்கிக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வெறுமனே ஜோன் மெக்கெயின் மற்றும் லிண்ட்சே கிரஹாம் போன்றவர்கள் மட்டுமல்ல. அமெரிக்க தேர்தல்களில் ரஷ்ய தலையீடு குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவும் மற்றும் அந்த விசாரணை வரம்பிற்குள் ரஷ்யாவுடனான ஃபிளினின் தொடர்புகளை உள்ளடக்கவும், செனட் குடியரசுக் கட்சித் தலைமை உடன்பட்டுள்ளது.

**வீழ்ச்சியடைந்துவரும் உலக பொருளாதார இடத்தை எதிர்கொள்ள முனைதல்**

அமெரிக்க ஏகாதிபத்தியம், அதன் சவாலுக்கிடமற்ற உலகளாவிய இராணுவ மேலாதிக்கத்தை கையிலெடுப்பதன் மூலமாக, அதன் வீழ்ச்சியடைந்து வரும் உலகப் பொருளாதார இடத்தை எதிர் கொள்ள முனைகிறது. உலகின் இரண்டாவது மிகப் பெரிய அணுஆயுத தளவாடங்களைக் கொண்டுள்ளதும், எண்ணெய் மற்றும் எரிவாயுவின் மிகப் பெரிய வளங்களைக் கொண்டுள்ளதும், புவியியல்ரீதியில் யுரேஷியா பெருநிலத்தின் மையத்தில் ஒரு முக்கிய இடத்தில் அமைந்துள்ளதுமான ரஷ்யாவினது இப்போதும் குறிப்பிடத்தக்க பலத்தையும், மற்றும் சீனாவின் வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் இராணுவப் பலத்தையும், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் மேலாதிக்க நோக்கிற்கான பாதையில் உள்ள பிரதான தடைகளாக காண்கிறது.

ஆளும் வர்க்கத்தினுள் உள்ள ட்ரம்ப் எதிர்ப்பாளர்கள், புட்டின் ஆட்சியைப் பலவீனப்படுத்தும் அல்லது அதைத் தூக்கிவீசும் நோக்கில், அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை ரஷ்யாவை நோக்கி இலக்கில் வைக்க வேண்டுமென வலியுறுத்துகிறார்கள். இது, சீனா முன்னிறுத்துகின்ற சவாலை எதிர்கொள்வதற்கு ஒரு முன் நிபந்தனையாகக் கருதப்படுகிறது.


**எண்ணற்ற வொஷிங்டன் சிந்தனை குழாம்கள், மத்திய கிழக்கிலும், உக்ரேனிலும், பால்டிக் நாடுகளிலும் மற்றும் இணையவழியிலும் ரஷ்ய படைகளுடனான இராணுவ மோதல்களுக்குரிய சூழல்களை அபிவிருத்தி செய்துள்ளன**

எண்ணற்ற வொஷிங்டன் சிந்தனை குழாம்கள், மத்திய கிழக்கிலும், உக்ரேனிலும், பால்டிக் நாடுகளிலும் மற்றும் இணையவழியிலும் ரஷ்ய படைகளுடனான இராணுவ மோதல்களுக்குரிய சூழல்களை அபிவிருத்தி செய்துள்ளன. முதலில் சீனா மீது ஒருங்குவிவதற்காக, தற்போதைக்கு ரஷ்யாவுடனான பதற்றங்களைக் குறைக்கும் நோக்கில் ட்ரம்ப் முன்மொழியும் போக்குகளை ஒட்டி, ரஷ்யாவுடனான நேரடி மோதல் கொள்கையிலிருந்து நோக்குநிலையை விலக்கிக் கொள்ளும் மாற்றத்தை ஏற்பதற்கு தேசிய பாதுகாப்பு உயரடுக்கு தயாராக இல்லை.

ஆளும் வர்க்கத்திற்குள் மற்றும் முதலாளித்துவ அரசுக்குள் மோதல் கொந்தளிப்பாக இருக்கின்ற அதே வேளையில், ஜனநாயக உரிமைகள் மீதான ட்ரம்ப் நிர்வாகத்தின் தாக்குதல்கள் முன்பில்லாத அளவிற்கு மக்கள் எதிர்ப்பை வெளிக்கொணர தூண்டுதலாக உள்ளது. மில்லியன் கணக்கான உழைக்கும் மக்களும் இளைஞர்களும், உள்ளூரில் பிறந்தவர்களும் புலம்பெயர்ந்தவர்களும், புதிய அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்களில் பங்கு பற்றி வருகின்றனர்.


(கேள்வி தொடரும்...)

FEB. 14, 2017, 1:26 P.M.
REPORTING FROM WASHINGTON
FBI agents interviewed Michael Flynn last month about his contacts with Russian ambassador, official says
Del Quentin Wilber



(Associated Press)

FBI agents interviewed then - national security advisor Michael Flynn last month about his conversations in December with the Russian ambassador to the United States, a U.S. official familiar with the matter said Tuesday. The official would not describe what Flynn said during in the interview, which took place after he took over as national security advisor on Jan. 20.Flynn resigned late Monday under pressure for apparently misleading Vice President Mike Pence about the nature of his conversations with Ambassador Sergey Kislyak.





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

தமது துணைவியார் அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் வரைந்த விடயங்கள் சிலவற்றை அவர் இந்தத் தொடரில் மேற் கோள்காட்டுகின்றார். அந்தப் பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.





64

–அடேல் பாலசிங்கம்

## பிரேமதாசா – விடுதலைப் புலிகள் பேச்சு

கொழும்பு பேச்சுக்களில் பாலாவுக்கு உதவியாக நியமிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்களான யோகரெத்தினம் யோகி, பரமமூர்த்தி ஆகியோரும் அவர்களது மெய்ப்பாதுகாவலரும் தொலைத் தொடர்புக்குப் பொறுப்பாக ஜூட்டும் வரிப் புலிச் சீருடைகளுடன் காட்டு மறைவிடங்களில் இருந்து வெளியே வந்தனர். இவர்களை அழைத்துச் செல்லவே இந்த உலங்கு வானூர்திப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

வணக்கமும், வாழ்த்தும் மாறி மாறிப் பரிமாறிக் கொள்ளப்பட்டன. நிழற்படங்கள் பிடிக்கப்பட்டன ஆனால், எரிபொருள் தீர்ந்து போவதற்கு முன்னர், உலங்கு வானூர்திகளை தமது பகுதிக்குள் கொண்டு போய் விட வேண்டும் என விமானிகள் பதறியபடியே இருந்தார்கள். எனவே, நெடுங்கேணிக் காட்டில் இறங்கிய அரைமணி நேரத்தில், மீண்டும் பறந்த உலங்கு வானூர்தியில் யோகியும், மூர்த்தியும் ஏனைய போராளிகளும் எம்மோடு சேர்ந்து சிங்களத்தின் தலை நகரான கொழும்பு நோக்கிப் பறந்து கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே நடைபெற்ற கொடிய யுத்த வரலாற்றில் பிரமிக்கத்தக்க புதியதோர் அத்தியாயம் திறந்தது. இரண்டு மணி நேரம் கழித்து, தலைநகரின் நடுவில், கொழும்பு விமானப் படைத் தலைமைப் பணிமனை மைதானத்தில் உலங்கு வானூர்தி தரையிறங்கியது. விமானப் படை மைதானத்தில் ஊடகவியலாளருடன் உரையாடிய பின், சிறப்பு அதிரடிப் படையினரின் கடும் பாதுகாப்பு ஏற்பாட்டோடு, ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட கொழும்பு ஹில்டன் உல்லாசப் பயணிகள் விடுதிக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கிருந்து, விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதாச அரசுக்கும் இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் பேச்சுக்கு ஆயத்தம் செய்வதே திட்டமாக இருந்தது.

## வடக்கிலும் தெற்கிலும் கொந்தளிப்பு

அதிசயிக்கத்தக்க வகையில், யாழ்ப்பாணத்தில் இருந்து நாம் தப்பி, மேற்குலகம் திரும்பிய பின், பாலாவும் நானும் பல நாடுகளுக்குப் பயணம் புரிந்தோம். அங்கெல்லாம், புலம் பெயர்ந்த தமிழ் மக்களையும், வெவ்வேறு அரசுகளின் அதிகாரிகளை யும் அரச சார்பற்ற அமைப்புகளின் அதிகாரிகளையும் சந்தித்து, இந்தியத் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகளையும், அதனால் விளைந்த கொடிய சம்பவங்களையும், இவை அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கும், இந்திய 'அமைதி காக்கும் படைக்கும்' இடையே எதிர்பாராத வகையில் பகைமைப் போராக மாறியதையும், எல்லோருக்கும் விளக்கிக் கூறினோம். வெளிநாடுகளில் இந்தப் பரப்புரைச் சுற்றுலாவை நாம் புரிந்து கொண்டிருக்கும் காலத்திலே இலங்கையிலே நிலைமை சீரழிந்தது. நீடித்துச் செல்லும் வன்செயல், மற்றும் அரசியல் உறுதியின்மை என்ற சகதியில், நாடு கீழே கீழே புதைந்து கொண்டிருந்தது. இலங்கை இனப்பிரச்சினைக்குள் இந்தியா தனது மூக்கை நுழைத்திருந்தது. தமிழர் தாயகத்தை இந்தியப் படைகள் ஆக்கிரமித்து நின்றன. இவை காரணமாக வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாகியது. தெற்கில், இந்தியத் தலையீட்டுக்கு எதிராக கடுப்படைந்த சிங்கள இளைஞர்கள் வெளிப்படையாகக் கிளர்ச்சி செய்தார்கள். ராஜீவ் காந்தியின் நிர்வாகம், இந்த நாட்டின் இரண்டு இனங்களினதும் தேசிய உணர்வின் ஆழத்தையும், அரசியல் விழிப்புணர்வையும் முற்றாகக் குறைத்து எடைபோட்டிருந்தது.

> "விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்று பெயர் பெற்றவர்கள், தங்கள் வீடுகளிலோ, வீதிகளிலோ கொலையுண்டு காணப்பட்டார்கள். இந்தப் பயங்கர ஆட்சியின் விளைவாக விடுதலைப் புலிகளுக்கான மக்கள் ஆதரவு பெருகியது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும், அதன் கைப்பொம்மைகளான ஆட்சியாளருக்கும் எதிராகப் புலிகள் நடத்திய போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு திரண்டது. தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களாக, - சிங்கள அரசினால் கைவிடப்பட்டவர்களாக - வரதராஜப்பெருமாளின் வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாகம் மக்களிடையே தாக்குப் பிடிக்க முடியவில்லை. மாறாக, திருகோணமலை நகர எல்லைக்குள் ஒரு சதுர மைல் பரப்பில், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாதுகாப்பில், அந்த நிர்வாகம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது."

இந்திய- இலங்கை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக இந்திய இராணுவத்தை 'அமைதி காக்கும் படை' என்ற பெயரில் புகுத்தியமை, ராஜீவ் நிர்வாகத்தின் மிக மோசமான அரசியல், இராஜதந்திரக் குளறுபடி என்று கூறலாம். துரதிஷ்டவசமாக, இந்தியப் படையின் வருகையால் வடக்கிலும் தெற்கிலும் கொடிய வன்செயல்கள் தாண்டவமாடியது. அத்துடன், இந்திய இராணுவம், அமைதிப் படை என்ற தனது தகைமையை இழந்து அடக்குமுறைப் படையாகவும் வன்முறைப் பூதமாகவும் உருவெடுத்தது. தமிழரதும், சிங்களவரதும் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிட்டுள்ளதால், வடக்கிலும் தெற்கிலும், இரு முனைகளிலும் இந்தியாவுக்கு எதிராக எதிர்ப்பியக்கம் கிளர்ந்தது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்த நிலையில், சிங்கள அரசு, இந்திய இராணுவப் படைகளோடு கூட்டுச் சேர்ந்து, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த முற்பட்டது; வடக்கின் குடியியல் நிர்வாகத்துக்கான மாகாண சபையை நிறுவவும் முற்பட்டது. மாகாண சபைத் தேர்தல்கள் 1988 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று, இந்திய இராணுவ நிர்வாகத்தின் ஏவலிலும் மேற்பார்வையிலும் நிகழ்ந்தன. போரும் பீதியும், மிரட்டலும் தாண்டவமாடிய சூழலில் நடத்தப்பட்ட இந்தத் தேர்தல், ஜனநாயக நடைமுறையையே நையாண்டி செய்தது. வாக்கு மோசடி, வாக்குப் பெட்டித் திணிப்பு ஆகியவையோடு வேறும் தில்லு முல்லுகளோடும் இந்திய ஆதரவில் செயற்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பீ.ஆர்.எல்.எப்) தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தது. வடக்குக் கிழக்கு மாகாண சபையிலே இந்தியச் சார்புடைய அரசியல் கட்சி ஒன்று ஆட்சியில் அமர்த்தப்பட்டு, அதன் தலைவராக கைப்பொம்மை அரசியல்வாதி ஒருவர் பொறுப் பேற்றார். அது சந்தேகத்தைத் தீர்த்து, திருப்தியை உண்டு பண்ணுவதற்கு பதிலாக, தமிழ் மக்களிடையே இந்தியா மட்டில், கோபத்தையும், கண்டனத்தையும் தோற்றுவித்தது.

தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் ஓர் அரசியல் விரிவாக்கமாகவே ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மாகாண நிர்வாகம் செயற்பட்டது. இந்திய நலனுக்கே அது முதலில் சேவகம் புரிந்தது. அமைதிப் படையின் இராணுவ ஒடுக்குமுறையையும் சித்திரவதையையும் மறைக்கும் மூடு திரையாக அது செயற்பட்டது. இன்று பரிகசிப்புக்கு உள்ளாகி இருக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத் துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கும் முறையிலும் அந்த ஆட்சி செயற்பட்டது. ஆயுதம் தரித்த ஈ.பி.ஆர்.எல்.எப் அணியினர் இந்திய இராணுவத்தின் கூலிப் படையாகவும் விடுதலைப் புலிகளை நசுக்கும் முயற்சியில் இந்தியரின் கூட்டாளிகளாகவும், தமது ஆட்சியைக் கண்டிப்பவர்களைக் கொன்றொழிப்பவர்களாகவும் செயற்பட்டனர். ஈ.பி.ஆர்.எல்.எப் இன் துரோக அரசியலையொட்டி மக்கள் அவர்கள் மீது வெறுப்பும் ஆத்திரமும் அடைந்தார்கள். இறுதியாக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொலையாளிக் குழுவாகவும், ஈ.பி.ஆர்.எல்.எப். தொழில் புரிந்தது. அவர்களைக் கண்டித்தவர்களும், கருத்து வேறுபட்டவர்களும் திடீரென்று காணாமற் போனார்கள். அவர்களைப் பற்றிப் பின்னர் என்றுமே விவரம் வெளியாகவில்லை. விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்று பெயர் பெற்றவர்கள், தங்கள் வீடுகளிலோ, வீதிகளிலோ கொலையுண்டு காணப்பட்டார்கள். இந்தப் பயங்கர ஆட்சியின் விளைவாக விடுதலைப் புலிகளுக்கான மக்கள் ஆதரவு பெருகியது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும், அதன் கைப்பொம்மைகளான ஆட்சியாளருக்கும் எதிராகப் புலிகள் நடத்திய போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு திரண்டது. தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களாக - சிங்கள அரசினால் கைவிடப்பட்டவர்களாக - வரதராஜப்பெருமாளின் வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாகம் மக்களிடையே தாக்குப் பிடிக்க முடியவில்லை. மாறாக, திருகோணமலை நகர எல்லைக்குள் ஒரு சதுர மைல் பரப்பில், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாதுகாப்பில், அந்த நிர்வாகம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது.

முன்னெப்போதும் நிலவாத சமூக அரசியல் சீரழிவு, இந்தக் காலப் பகுதியில் இலங்கையைச் சின்னாபின்னப் படுத்தியது. பன்னிரண்டு ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சி (யூ.என்.பி) ஆட்சியை வழிநடத்திய ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தமது வாரிசாகப் பதவியில் அமர்த்திய ரணசிங்க பிரேமதாசவிடம் இந்தச் சீரழிவையே அரசியல் முதுசமாகக் கையளித்தார். சிறிலங்காவின் இரண்டாவது நிறைவேற்று அதிகார அரசுத் தலைவராக 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதியில் பிரேமதாச தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மட்டு மீறிய நெருக்கடி நிலையை அவர் முகம் கொடுத்தார். நாடு முழுவதும் குழப்பம். அமைதியின்மை, என்றுமே நிலவாத அத்துணை வன்செயல்கள் ஆகியவை அவரை எதிர்கொண்டன. வடக்குக் கிழக்கில், இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்திய அமைதிப் படை, பொதுமக்கள் ஆதரவுடனும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை அடக்க முடியாது திணறிக் கொண்டிருந்தது. தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜனதா விமுக்தி பெரமுன) ஆயுதம் தரித்த வன்முறைக் கிளர்ச்சி வேகம் பெற்றிருந்தது.'

(தொடரும்...)

# தீர்வுகள் ஏதுமின்றி தொடரும் முல்லை.மக்களின் போராட்டம்

## அதிகாரத்தில் உள்ளோர் அலட்டிக் கொள்ளவில்லை மகளிர் அபிவிருத்தி நிலையம் விசனம்

புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு மக்களது போராட்டங்கள் தீர்வுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் தொடர்கிறது. பூர்வீகமாக வாழ்ந்துவந்த வதிவிடங்களில் வாழ வேண்டும் என்ற உரிமைக் குரலோடு அவர்கள் போராடி வருகின்றனர். ஜனவரி 31 ஆம் திகதியிலிருந்து ஒன்றிணைந்த போராட்டத்தை முனைப்போடு நடத்துகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அதிகாரத்தில் உள்ளவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை என்று மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் விசனம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

### 83 வயது மூதாட்டியின் இறுதி ஓசை

புதுக்குடியிருப்பில் போராடி வரும் 49 குடும்பங்களில் 169 பேர் 19 ஏக்கர் நிலத்துக்கு பங்காளிகளாக உள்ளனர். அங்கு நாம் சந்தித்த ஓர் தாய் அவருக்கு 83 வயதாகின்றது. அவரது வீடு அவர் போராடி வரும் இடத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளது.

தனது வீட்டைப் பார்த்த படியே இருக்கிறார் என்றும் தான் இறப்பதற்கு முன் தனது வீட்டில் ஒரு தடவையாவது போய்த் தங்க வேண்டும் என்றும் தெரிவிக்கும் அவரதுகண்ணீர்க் கதை மறக்க முடியாதது.

போராடி வருபவர்களில் பலர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகவே உள்ளனர். தமது குடும்பங்களில் இராணுவத்தினரால் பிடிபட்டுள்ளவர் பலர் உள்ளனர் என்று தமது சோகக் கதைகளையும் ஞாபக மூட்டினர்.

ஓர் தடவை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றோம் என்று இவர்களை உள்ளே அழைத்துச் சென்ற இராணுவத்தினர், தமது பெற்றோரின் திருமண வீடியோவை போட்டுக் காட்டி விட்டு அனுப்பியுள்ளனர். பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகளோடு நையாண்டி செய்தல், தகாத வார்த்தைகள் பேசுதல் எல்லாமே இங்கு நடைபெறுகின்றன என்று அங்கு நாம் சந்தித்த பெண்கள் கூறினார்கள்.

புதுக்குடியிருப்பில் மக்களின் 15 வீடுகளில் இராணுவம் குடிகொண்டுள்ளது. அங்கு தென் இலங்கையில் இருந்து சுற்றுலா வருபவர்களும் தங்கிச் செல்வதுண்டு என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### மறைந்திருந்து கண்காணிப்பு

புதுக்குடியிருப்பில் இராணுவத்தினர் வேலி ஓரங்களில் மறைந்திருந்து, போராடி வரும் மக்களை கண்காணித்து வருகின்றனர்.

போராடி வரும் புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவு காட்டிப் பல சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் அங்கே சென்று அவர்கள் உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றனர்.

இதேபோல இந்தப் பிரதேசத்தின் கேப்பாபிலவில் 59 குடும்பங்களின் 50 ஏக்கர் காணிகள், வான் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

போரால் பாதிப்புக்களில் இருந்து இன்றுவரை தமது சோகங்களையும் இழப்புக்களையும் சந்தித்து அரசியல் ரீதியான தீர்வுகளில் நம்பிக்கை இழந்தவர்களாக தாமாகவே வீதிக்கு வந்துள்ளனர். கூட்டாட்சியில் தமக்கு நீதி கிடைக்கும், தமது நிலங்கள் தமக்குக் கையளிக்கப்படும் என நம்பியே ஏழு வருடங்கள் பறந்தோடி விட்டன. எதுவுமே சாத்தியப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நிலவிடுவிப்பு நடத்தியிருந்தாலும் மக்கள் பல பிரச்சினைகளோடு தமது அன்றாட வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.

போராட்டத்தில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள். அவர்களது ஓயாத தியாகம் மதிக்கப்பட வேண்டும். ஆதரவுகள் வந்து குவிந்த போதிலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கின்றது.

காணிகளுக்கு உரிய அத்தாட்சிகளைக் காட்ட வேண்டும் என்று கேட்கும் அதிகாரம் இராணுவத்துக்கு வழங்கப்படவில்லை. காணி உரிமையாளர்கள் தமது சொந்தக் காணிகளுக்குள் அத்து மீறிப் புகுந்தால் சுடப்படுவார்கள் என்ற அறிவிப்புக் கூட அப்பட்டமான மனித உரிமை மீறலே! அரசு இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வைத் தர வேண்டும்.- என்றுள்ளது. (ஐ)

# பேராதனை பல்கலை மாணவர் 15 பேர் பொலிஸாரால் கைது!

## பகிடிவதைக் குற்றச்சாட்டில்

கொழும்பு, பெப்.21

பகிடிவதை வழங்கிய சம்பவம் தொடர்பாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 15 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த மாணவர்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை - கலஹா வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து விவசாய பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் 8 பேருக்கு, இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சிலர் பகிடிவதை செய்கின்றனர் என்று பல்கலைக்கழக ஒழுக்காற்று மேற்பார்வையாளருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் பேராதனை பொலிஸாருக்கு அறிவித்திருந்தார். அதை அடுத்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சம்பவம் இடம்பெற்ற வீட்டை சுற்றி வளைத்து மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கு உரிய மாணவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ள நிலையில், பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜப்பான் புறப்பட்டார் பொலிஸ் மா அதிபர்



கொழும்பு, பெப்.21

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். டோக்கியோநகரில் நேற்று ஆரம்பமாகியுள்ள மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே இவர் சென்றுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது என்று தெரிய வந்துள்ளது.

இதன்படி அவர் நேற்று அதிகாலை நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தலையாழி வைரவரின் கிராம ஊர்வலம்

கொக்குவில் தலையாழி சாமுண்டி சமேத ஞானவைரவர் ஆலயத்தின் கிராம ஊர்வலம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

பிற்பகல 2.30 மணிக்கு ஆரம்பமாகும் கிராம ஊர்வலம் ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு சபாபதி வீதி, காங்கேசன்துறை வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி, அச் சுக்கூட வீதி, ஆடியபாதம் வீதி, பிரம்படி வீதி, சபாபதி வீதி வழியாக வலம் வந்து ஆலயத்தை வந்தடையும். (ம)

# ஈழப்போரில்...

(09 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

அவரது அந்தப் பதில் புலிகள் அமைப்புக்கும் இந்தியப் படைக்கும் இடையில் யுத்தம் இடம்பெறுவதற்கு ஜே.ஆர். காத்திருந்தார் என்பதும் அவர் இதில் நம்பிக்கையுடனும் இருந்தார் என்பதையும் காண்பித்தது.'

இந்திய - இலங்கை திட்டம் திட்டமிட்டதன் பிரகாரம் இடம்பெறாவிட்டால் அது தோல்வியில் முடிவடையும் என்பதை அதிபர் ஜே.ஆர். தெளிவாக நோக்கியிருந்தார். புலிகள் அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ளாவிட்டால், புலிகளுக்கும் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கும் இடையில் யுத்தம் ஏற்படும் என்பதில் ஜே.ஆர். திருப்தியுற்றிருந்தார் என்பதையே அவர் என்னிடம் கூறிய கருத்துக்கள் மூலம் அறிய முடிந்தது.

இவ்வாறானதொரு யுத்தம் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பை முடிவுக்குக் கொண்டு வரும் என ஜே.ஆர். கணித்திருந்தார்.

### புலிகளுடனான யுத்தத்துக்கு திருப்பு முனையாக இருந்த இந்திய - இலங்கை உடன்படிக்கை

1987 தொடக்கம் அதிபர் ஜே.ஆரின் நகர்வுகள், புலிகள் அமைப்புடன் இந்திய அமைதி காக்கும் படை யுத்தத்தை மேற்கொள்ளவும் இதன் காரணமாக ஆயிரம் வரையான இந்திய வீரர்கள் யுத்தத்தில் மரணிப்பதற்கும் 1991 இல் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கும் காரணமாக அமைந்தது. இந்தியக் காரணி இல்லா தொழிக்கப்பட்ட பின்னர் யுத்தத்துக்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த யுத்தமே ராஜபக்ஷவின் ஆட்சியின் போது இறுதிக் கட்டத்தை அடைந்தது.

இந்திய இராணுவத்தினர் யுத்தத்தில் கொல்லப்பட்டமை மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை போன்றன புலிகள் இந்தியாவின் ஆதரவை இழப்பதற்குக் காரணமாகியது. அத்துடன், புலிகள் தமிழ் நாட்டின் ஆதரவையும் இழக்க வேண்டியேற்பட்டது.

### குறைகள் மற்றும் தவறுகள் புலிகளை இந்தியா குறைவாக மதிப்பிட்டது.

அரசியல் தீர்வொன்றைப் புலிகள் பெற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தே தனது படையை இலங்கைக்கு அனுப்பியது இந்தியா.புலிகள் தமது பெருமளவான ஆயுதங்களைக் கையளிக்க மறுத்ததுடன், இந்திய - இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து திலீபன் உண்ணா விரதமிருந்து மரணித்தார். இவரது மரணம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுத் தது.

ஆனாலும், இந்திய அமைதி காக்கும் படையினர் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுக்கவில்லை அத்துடன் இலங்கைப் படைகளை யுத்தத்தில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்கவில்லை. இலங்கையின் உயர் மட்டத்தினர் இந்தியாவின் உயர் மட்டத்துடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. இதனால் நிலைமை மேலும் மோசமாகியது.

புலனாய்வு அமைப்புக்களின் ஊடாகத் தொடர்பை ஏற்படுத்துமாறு இந்திய அரசிடம் கூறுவதற்காக என்னைப் புதுடில்லிக்கு விரைந்து செல்லுமாறு அதிபர் ஜே.ஆர். கட்டளையிட்டார். இவ்வாறானதொரு சூழலிலேயே புலிகள் அமைப்புக்கும் இந்திய அமைதிகாக்கும் படைக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பமாகியது.

எதிர்பார்க்காத நிகழ்வுகள் இடம்பெறும் போது அவற்றை எவ்வாறு எதிர்நோக்குவது என்பது தொடர்பான உறுதிப்பாடுகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமையே இது தோல்வியடைந்தமைக்கு காரணமாகும்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் பல தியாகங்களைச் செய்தனர். இவர்களில் பலர் யுத்தத்தில் உயிர் நீத்தனர். ஆனால் அவர்களால் புலிகளை முல்லைத் தீவுக் காட்டுக்குள் விரட்டியடிக்க முடியவில்லை. புலிகள் தமக்கான தமிழ்த் தேசிய இராணுவத்தை வளர்த்துக் கொண்டனர். இவர்களால் புலிகளை முற்று முழுதாகத் தோல்வியடையச் செய்ய முடிமாயிருந் திருந்தால், பூகோள அரசியல் மற்றும் உண்மையான அரசியல் எவ்வாறு செயல் புரிந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கலாம்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருப்பினும், இந்திய அமைதி காக்கும் படையினரை நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்கான நகர்வுகளை அதிபர் பிரேமதாச முன்னெடுத்தார்.

வரலாறு என்பது நடைபெற்று முடிந்த நிகழ்வுகளை சரியாக பதிவு செய்வதேயாகும். இது ஓர் எடுகோளாக இருக்கக் கூடாது. அதிபர் ஜே.ஆரின் முயற்சியாக புலிகளுக்கு எதிராக இந்தியாவைப் பயன்படுத்தியமை, குறிப்பாக ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னரான சூழல், இந்திய அமைதிகாக்கும் படை வெளியேற்றப்பட்டமை போன்ற நிகழ்வுகள் தற்போது புலிகள் அமைப்பை வெற்றி கொள்வதற்கு உதவியுள்ளது. ஆகவே, 1987 ஜூலை உடன்படிக்கை இலங்கைக்கு நன்மையும் அளித்துள்ளது.

தமிழ்ப் பயங்கரவாதப் பிரச்சினை பல்வேறு முகங்களைக் கொண்டிருந்தது. இது தனியே இராணுவ சார் அச்சுறுத்தலாக மட்டும் அமையவில்லை. இது பலமுகங்களைக்கொண்டிருந்தது. தமிழர் பிரச்சினைகளை அமைதிப்படுத்த வேண்டியிருந்தது. அரசியல் மற்றும் இராஜதந்திர உந்துதல்கள் இந்தியக் காரணிக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் காணப்பட்டது. புலம் பெயர் தமிழர்கள் புலிகளுக்கு நிதி, ஆயுத உதவிகளை வழங்க உதவியதுடன் பரப்புரை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1985 இன் ஆரம்பத்தில் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஜெயநாத் ராஜபக்ஷ தமிழர் பிரச்சினையை முழுமையாக நோக்குவதற்கான திட்டம் ஒன்றை வரைந்து அரசுக்கு ஆலோசனைமுன்வைக்கப்பட்டது.இதனை முதன்மையாகக் கொண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக ஆராய்ந்திருந்தால் தவறுகளை நீக்கியிருக்க முடியும்.

நான் 2001 இல் எழுதிய நூலில் '1985 இன் ஆரம்பத்தில், வெளி விவகார அமைச்சின் தென்னாசியாவுக்கான இயக்குநராகப் பணியாற்றிய ஜெயநாத் ராஜபக்ஷவுடன் நானும் இணைந்து கொள்கைத் திட்டமிடல் ஆணைக்குழுவின் கூட்டு பரிந்துரை ஒன்றைக் கையளித்திருந்தோம். இது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வை வரையறுப்பதற்கு உதவக் கூடிய வகையிலேயே பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நாங்கள் சமர்ப்பித்த பரிந்துரை தொடர்பாக எவ்விதப் பதிலையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்' என்று குறிப்பிட்டுள்ளேன்.

அமைச்சரவைச் செயலர் சமரசிங்க மற்றும் அதிபரின் செயலாளர் மெனிக்டிவெல ஆகியோரிடம் இந்தப் பரிந்துரையை மீளவும் ஆராயுமாறு அதிபர் ஜே.ஆர். கட்டளையிட்டிருந்தார்.

இந்த நோக்கத்துக்கான கலந்துரையாடலை மேற் கொள்வதற்கான இராப்போசனம் ஒன்றும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.நாங்கள் மிகவும் சுவையான உணவை உண்டோம், ஆனால் இந்தப் பரிந்துரை தொடர்பாக ஒரு வார்த்தை கூட இங்கு பேசப்படவில்லை.

# கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம்; கோட்டாபயவுக்குத் தொடர்புள்ளது

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிசை நீதிமன்றில் தகவல்

கொழும்பு, பெப்.21

தி நேசன் இதழின் இணைஆசிரியர்கீத்நொயார் கடத்தப்பட்ட சம்பவத்துடன், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்புபட்டிருந்தார் என்றும் கல்கிசை நீதிமன்றத்தில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி, இரவு கடத்தப்பட்ட கீத் நொயார், தெம்பேயில் உள்ள இராணுவ இரகசிய முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். எனினும், சிவில் சமூக அமைப்புகள், அனைத்துலக அமைப்புகள், இராஜதந்திர தூதரகங்கள் கொடுத்த அழுத்தங்களை அடுத்து, அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சனியன்று மேஜர் புலத்வத்த உள்ளிட்ட மூன்று இராணுவப் புலனாய்வு அதிகாரிகளைக் கைது செய்திருந்தனர்.

இவர்களை கல்கிசை நீதிவான் முன்பாக நிறுத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:-

கீத் நொயார் தடுத்து வைக்கப்பட்டிருந்த தெம்பே இரகசிய வதைமுகாம் அமைந்திருந்த வீட்டை, மேஜர் புலத்வத்தவே தனது தனிப்பட்ட அடையாளங்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்து வாடகைக்கு அமர்த்தியிருந்தார்.

கீத் நொயாரைக் கடத்திய பின்னர், அதுபற்றி இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் அமால் கருணாசேகரவுக்கு மேஜர் புலத்வத்த அறிவித்தார். அவர், அரச புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவுக்குத் தெரியப்படுத்தினார்.

இதையடுத்து மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண, கீத் நொயார் கடத்தி வைக்கப்பட்டிருப்பது குறித்து பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்தார்.

உடனடியாக, மேஜர் புலத்வத்தவுக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ பேசினார். சில உத்தரவுகளையும் வழங்கியிருந்தார்.

எதிர்காலத்தில் இது தொடர்பான முழு விவரங்களையும் சமர்ப்பிப்போம்:- என்று கூறினர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்.

இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவியில் இருந்த போதே, இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

எனினும், ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பயங்கரவாதச் செயற்பாடுகளை ஒத்த செயல்கள் குறித்து, சரத் பொன்சேகா குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் நீண்ட வாக்குமூலம் ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் கொடுத்துள்ளார்.

கோட்டாபயராஜபக்ஷவுக்குத் தெரிந்தே பல கடத்தல்கள், கொலைகள் இடம்பெற்றுள்ளமை குறித்தும் அவர் விவரித்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தமிழ்த் தாய் நாள் விழா

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.இந்தியதுணைத் தூதரகமும், இலங்கை குமரி தமிழ்ப் பணி மன்றமும் இணைந்து நடத்தவுள்ள உலகத் தமிழ் தாய் நாள் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல்2 மணிக்கு நெடுந்தீவு பொதுக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குமரிவேந்தன் தலைமையில்இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன், வட மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில்கிறிஸ்தவர்களின் தமிழ்க் கொடை நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ஐ-21)

## சாதாரணதர மாணவர்களுக்கு செயன்முறைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.21

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை புதிய, பழைய பாடத்திட்டத்தில் 2016ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அழகியல் பாடங்களுக்கான செயன் முறைப் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மார்ச் 8 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

சங்கீதம் (கீழைத்தேசம்), சங்கீதம் (மேலைத்தேசம்), சங்கீதம் (கர்நாடகம்),நடனம் (சுதேச), நடனம் (பரதம்) , நாடகமும் அரங்கியலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) ஆகிய பாட நெறிகளுக்கான செயன்முறைப் பரீட்சைகளே ஆரம்பமாகவுள்ளன.

சாதாரணதரப் பரீட்சையில் இந்தப் பாடங்களில் எழுத்துப் பரீட்சையில் தோற்றிய சகல பரீட்சார்த்திகளும் இந்தச் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

இந்தப் பாடங்களில் இறுதிப் பெறுபேற்றைத் தீர்மானிப்பதற்கு எழுத்துச் செயன் முறை ஆகிய பகுதிகளின் புள்ளிகளும் உபயோகிக்கப்படும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணையும் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-54)

# தமிழ்ப் பெண்கள்மீது பாலியல் துஷ்பிரயோகம்; சந்திரிகாவின் கூற்றை மறுக்கிறது இராணுவம்!

கொழும்பு, பெப்.21

இராணுவத்தால் தமிழ் பெண்கள் பரந்த அளவில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டை இராணுவம் நிராகரித்துள்ளது.

37 வருடகால யுத்தத்தால் விதவைகளாக்கப்பட்ட பெண்கள், அதிகாரிகளால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத் தலைவரான சந்திரிகா குற்றஞ்சாட்டியிருந்தார்.

உயர்மட்டத்திலுள்ள தமிழ் அதிகாரிகள் முதல் கிராம சேவகர் மட்டத்தில் உள்ள அதிகாரிகள்வரை தற்போது பெரியளவில் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர் என்று அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது அவர் கூறியிருந்தார்.

இராணுவத்தில் உள்ள சிலரும் பாலியல் துஷ்பிரயோகங்களில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இனநல்லிணக்கஅமைப்பின் தலைவராக செயற்படும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இந்தக் கருத்து குறித்து அதிருப்தி தெரிவித்து இராணுவம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், முன்னாள் ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டு அடிப்படை அற்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கில் 2010 ஆம் ஆண்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. அனைத்து சிவில் நிர்வாகத்தில் இருந்தும் இராணுவம் விலகியுள்ளது.

1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரேமாவதி மனம்பேரி, கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் ராஜினி வேலாயுதம் பிள்ளை ஆகியோரின் வழக்குகளில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இந்த அனைத்து வழக்குகளிலும் சிவில் நீதிமன்றங்களுக்கு இராணுவம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியது.- என்று அந்த அறிக்கையில் இராணுவம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# கனத்த மழை, கடும் வறட்சியினால் நாட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பு

### ஐ.நா. உணவு நிறுவனத்தின் அதிகாரி கவலை தெரிவிப்பு

கொழும்பு,பெப்.21

இலங்கையில் நிலவும் கடும் வறட்சியின் விளைவாக தோன்றி உள்ள பாதிப்புக்களைப் போக்குவதற்கு, ஐக்கிய நாடுகள் சபையின், உலக உணவு நிறுவனம் தீவிரமாகச் செயற்பட உள்ளது.

அரசின் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறைகள் ஆகியன ஒன்றிணைந்து செயற்படும் வகையில் திட்டம் ஒன்றை, உலக உணவு நிறுவனம் தீட்டியுள்ளது.

அதற்கு முன்னோடியாக, உலக நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள், வறட்சியின் தாக்கங்கள், பாதிப்புக்கள் குறித்து பகுத்த முடிவுகள், அமைச்சர் அவையின் உப குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இம்மாதத்தில், உலக உணவு நிறுவனமும் அரசாங்கமும் இணைந்து உணவுப் பாதுகாப்பு, பாதிக்கப்பட்ட மக்களின் நிலைவரம் குறித்து மதிப்பீடு நடத்த உள்ளன. என்பது தகவல்.

அதேவேளை, மகாவலி ஆற்றின் புறத்தே உள்ள, 14,000 விவசாயக் குடும்பங்களுக்குத் தேவையான சிறிய குளங்கள் எழுபத்திரெண்டு புனரமைப்புச் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இயற்கை அனர்த்தங்களினால் - வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சியினால் - பாதிப்புக்கள் உண்டாக வாய்ப்பு உண்டு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் பெய்த கனத்த மழையின் பெறுபேறாக, பெரும்போகப் பயிர்ச் செய்கை பாதிப்புற்றது என்றும் உலக உணவு நிறுவனத்தின் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## இலங்கை அரசுக்கு ஜப்பான் நவீன கருவிகள் நன்கொடை

கொழும்பு பெப்.21

இலங்கை பொலிஸாரின் கொமாண்டோப் படைப்பிரிவான சிறப்பு அதிரடிப் படையையும், சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக் களத்தையும் பலப்படுத்துவதற்கு ஜப்பான்நவீன கருவிகளை நன் கொடையாக வழங்கவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் இலங்கையில் தீவிர வாத முறியடிப்பு ஆற்றலை வலுப்படுத்தும் நோக்கிலேயே ஜப்பான் இந்த உதவியை வழங்க விருக்கிறது.

ஜப்பானின் பொதுக் கொடை உதவித் திட்டத்தின் கீழ் இதற்காக 327 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் கையெழுத்திடப்படும்.

சட்டம், ஒழுங்கு மற்றும் போக்குவரத்து அமைச்சு என்பன இந்த உடன்பாட்டில் கையெழுத்திடவுள்ளன.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் தொடர்பாடல் கருவிகளும் உள்ளடங்கியுள்ளன என்று சட்டம் ஒழுங்கு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## யாழ்.இந்து மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,,பெப்.21

2016 டிசம்பர் ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் உயர்தரம் கற்பதற்காக; தாங்கள் கற்க விரும்பும் துறைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு இற்கு முன்னராக மீண்டும் ஒப்படைக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விபத்தில் சிறுவன் படுகாயம்

கைதடி,பெப்.21

கைதடிப் பாலத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் மதியம் ஹயஸ் வாகனம் சைக்கிளில் சென்ற சிறுவனை மோதியதில் சிறுவன் படுகாயமடைந்தான். சிறுவனின் இடதுகால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான். தச்சன்தோப்புப் பகுதியைச் சேர்ந்த சந்திரன் நிதுர்சன் (வயது 15) என்ற சிறுவனே காயமடைந்தான். (இ-21)

# தமிழக உள்ளூராட்சித் தேர்தல் மே 15 இற்குள் நடத்தப்படும்!

## மாநிலத் தேர்தல் ஆணையம் தெரிவிப்பு

சென்னை, பெப்.21

தமிழகத்தில் எதிர்வரும் மே 15 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து மாநில தேர்தல் ஆணையம் தொடர்ந்த வழக்கு விசாரணையில், மாநில தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று பதில் அளித்தது.

அப்போது, எதிர்வரும் மே 15 ஆம் திகதிக்குள் தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால், உத்தேச திகதியைக் கூறாமல், உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும். சரியான தேர்தல் திகதியை அறிவிக்க வேண்டும் என்று நீதிபதி அறிவுறுத்தினார்.



முன்னதாக, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணையில் கடந்த வாரம், மாநில தேர்தல் ஆணையத்தை, சென்னை உயர் நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

### மும்பையில் பிளாஸ்ரிக் தொழிற்சாலையில் தீ! 4 பேர் உயிரிழப்பு!!

மகாராஷ்டிர மாநிலம் மும்பை அருகே உள்ள பிவாண்டியில் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக 4 பேர் உயிரிழந்தனர்; மேலும் 2 பேர் காயம் அடைந்தனர்.

விபத்துக் குறித்து தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் அங்கு சென்று தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தொழிற்சாலையில் மின் கசிவு ஏற்பட்டதன் காரணமாகவே இந்தத் தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

### சட்டசபையில் நடைபெற்ற சம்பவங்கள் ஆளுநரிடம் நேற்று அறிக்கை தாக்கல்

சென்னை, பெப்.21

தமிழக சட்டசபையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் வாக்கெடுப்பு இடம் பெற்றவிதம் குறித்து ஆளுநரிடம் பேரவைச் செயலர் ஜமாலுதீன் நேற்று அறிக்கை தாக்கல் செய்தார்.

சட்டப்பேரவை செயலர் ஜமாலுதீன் நேற்று ஆளுநர் மாளிகைக்கு நேரில் சென்று அறிக்கையை வழங்கினார்.

கடந்த சனிக்கிழமை பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின் போது நடைபெற்ற சம்பவங்கள் குறித்து அறிக்கையில் ஜமாலுதீன் விளக்கம் அளித்துள்ளார் என்று தெரிகிறது.

சட்டசபை காணொலிக் காட்சிகளும் ஆளுநர் மாளி கையில் வழங்கப் பட்டன.

முன்னதாக, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக சட்டசபை சிறப்புக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. அப்போது, இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். (எ)

### முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார் முதல்வர் பழனிச்சாமி

சென்னை, பெப்.21

தமிழகத் தலைமைச் செயலகத்துக்கு நேற்று முற்பகல் சென்ற தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பயன்படுத்திய முதல்வர் அறையில் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார். முக்கியக் கோப்புகளிலும் கையெழுத்திட்டார்.

முதல்வர் அறையில் ஜெயலலிதா அமர்ந்த நாற்காலியில் அமர்ந்து, தனது முதல்வர் பணியை ஆரம்பித்தார். முன்னதாக, ஜெயலலிதா திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதையும் செலுத்தினார்.

அப்போது தமிழக தலைமைச் செயலர் கிரிஜா வைத்தியநாதன், அ.தி.மு.க. சிரேஷ்ட நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர். (எ)


# நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்த்து உயர் நீதிமன்றில் தி.மு.க. முறையீடு

## அவசர வழக்காக இன்று விசாரணைக்கு ஏற்பு

சென்னை, பெப்.21

நம்பிக்கை வாக்கெடுப்புச் செல்லாது என்று அறிவிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. முறையீடு செய்துள்ளது. இந்த வழக்கு இன்று அவசர வழக்காக விசாரிக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் உறுதியளித்துள்ளது.

தி.மு.க. தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.சண்முகசுந்தரம் உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இது தொடர்பாக பொறுப்பு நீதிபதி ரமேஷ், நீதிபதி ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு முன் முறையீடு செய்தார்.



அந்த மனுவில், கடந்த 18 ஆம் திகதி சட்ட சபையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பு சட்ட விரோதமானது. அ.தி.மு.க. சட்ட சபை உறுப்பினர்கள் கூவத்தூரில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களைச் சிறைக்கைதிகளைப் போல் சட்ட சபைக்கு அழைத்து வந்தனர். அவர்கள் யாரும் மனசாட்சிப்படி வாக்களிக்கவில்லை. கட்டாயத்தின் பேரிலேயே வாக்களித் திருக்கின்றனர்.

அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டிருந்ததாலேயே, இரகசிய வாக் கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் கோரிக் கையை சபாநாயகர் நிராகரித்து விட்டார். திட்டமிட்டே எதிர்க்கட்சிகளை வெளியேற்றிவிட்டு நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தியிருக்கிறார். இது ஜனநாயக மரபு அல்ல. இந்த வாக்கெடுப்பை மக்களும் நிராகரிக்கிறார்கள்.

இது தொடர்பாக ஆளுநரிடமும் முறையிட்டிருக்கிறோம். எனவே, இந்த அரசைக் கலைத்து விட்டு மீண்டும் பேரவையில் வாக்கெடுப்பு நடத்த உத்தரவிட வேண்டும். இந்த முறை இரகசிய வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது.

மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் இன்று காலை இந்த வழக்கு அவசர வழக்காக முதலில் விசாரிக்கப்படும் என்று தெரிவித்தனர். (எ)

### சென்னைச் சிறைக்கு மாற்றக்கோரி கடிதம் எழுதுவதற்கு சசிகலா முடிவு

சென்னை, பெப்.21

சென்னைச்சிறைக்கு தன்னை மாற்றக்கோரி, தமிழகம் மற்றும் கர்நாடக சிறை அதிகாரிகளுக்கு கடிதம் எழுத சசிகலா முடிவு செய்துள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 3 பேரும் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா, தன்னை சென்னை சிறைக்கு மாற்றக்கோரி தமிழக, கர்நாடக சிறைத் துறை உயர் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுத முடிவு எடுத்துள்ளார். இதுதொடர்பாக சசிகலா தனது சட்டத்தரணிகளிடம் ஆலோசனையும் நடத்தி உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வழக்கு தமிழகத்தின் வழக்கு என்பதால், இருமாநில சிறைத்துறை அதிகாரிகள் பரஸ்பரமாக ஒப்புக் கொண்டால் சசிகலாவை சென்னை சிறைக்கு மாற்றுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. இதற்கு உச்ச நீதிமன்றத்தின் அனுமதி தேவை இல்லை என்றும் பரப்பன அக்ரஹாரா சிறைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, யாராவது உச்சநீமன்றில் மனு தாக்கல் செய்து, சசிகலாவை சென்னை சிறைக்கு மாற்றக் கூடாது என்று கோரினால், அப்போது உச்ச நீதிமன்றம் இதில் தலையிடும் என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

### தமிழக அரசியல் குழப்பங்களுக்கு மத்திய அரசுதான் காரணமாம்

#### கம்யூ.கட்சியின் சிரேஷ்ட தலைவர் பாண்டியன் கூறுகிறார்

கோவை, பெப்.21

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் காரணங்களுக்கு பா.ஜ.க. அரசுதான் காரணம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவர் த.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

கோவை சின்னியம் பாளையத்தில் நேற்று முன்தினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சூலூர் வட்டார மாநாடு நடைபெற்றது. அதில் பங்கேற்கச்சென்ற பாண்டியன் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

தமிழக அரசியலில் தற்போது நடைபெற்று வரும் சம்பவங்கள் அனைத்தும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக மத்திய பா.ஜ.க. அரசால் நடத்தப்படுபவை. தமிழகத்தில் எப்படியாவது நுழைய வேண்டும் என்று பா.ஜ.க. முயற்சிக்கிறது. அதிகாரத்தையும், நிதிப் பலத்தையும் பயன்படுத்தி அ.தி.மு.கவை உடைக்கவும், குழப்பத்தை ஏற்படுத்தி ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரவும் பா.ஜ.க. முயற்சிக்கிறது.

தற்போதைய முதல்வர் பொறுப்பு மலர்கிரீடம் அல்ல; முள்கிரீடம் போன்றது. இனிமேல் தமிழக சட்ட சபைக்கு நித்யகண்டம் பூர்ண ஆயுள்தான். ஒவ்வொரு நாளும் சோதனைகளைச் சந்தித்துத்தான் ஆள்பவர்கள் பொறுப்பில் நீடிக்க முடியும்.



சட்டசபையில் இடம் பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் சட்டசபைத் தலைவர் மரபுப்படியே நடந்து கொண்டார். எதிர்க்கட்சிகள் இல்லாமல் நடத்தப்பட்ட வாக்கெடுப்புச் செல்லாது என்று சொல்ல முடியாது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பேரவைத் தலைவருக்கு உத்தரவிடுவது ஜனநாயகத்தை மீறிய செயலாகும்.

முதல்வராக பொறுப்பேற்றுள்ள எடப்பாடி பழனிச்சாமி மக்கள் நலனைத் தவிர தனக்கு எதுவும் தேவையில்லை என்று நற்பெயர் எடுக்க வேண்டும். - என்றார். (எ)

### காஷ்மீர் எல்லையில் 50 நாள்களில் பயங்கரவாதிகள் 22 பேர் சாவு!

காஷ்மீரின் எல்லைப் பகுதியில் கடந்த 50 நாள்களில் நடைபெற்ற தாக்குதல்களில் பயங்கரவாதிகள் 22 பேர் உயிரிழந்தனர்.

பயங்கரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே அவ்வப்போது தாக்குதல் நடைபெற்று வருகிறது. இதில் 50 நாள்களில் பயங்கரவாதிகள் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்கு பின்னர் சமீபத்தில் நடைபெற்ற தாக்குதல்களில் தான் அதிகளவில் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 26 வீரர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர். இதில் பாதுகாப்புப் பணியின்போது பனிச்சரிவில் சிக்கி அதிகாரி உட்பட 20 வீரர்கள் உயிரிழந்தமையும் அடங்கும். (எ)

# மொசூல் நகரை மீட்கும் நடவடிக்கையின்போது மக்களைக் காப்பாற்றுவதற்கே முன்னுரிமை!

## வலியுறுத்துகிறது ஐ.நா.சபை

ஜெனீவா, பெப்.21

ஈராக்கில் ஐ.எஸ். ஆயுததாரிகளின் வசமுள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மொசூல் நகரின் மேற்குப்பிராந்தியத்தை ஐ.எஸ்.ஆயுததாரிகளிடம் இருந்து மீட்கும் நடவடிக்கைக்கு ஈராக் படையினர் தயாராகிவரும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

மொசூல் நகரின் கிழக்குப் பிராந்தியத்தை மீட்கும் நடவடிக்கையின் போது பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஈராக் படையினர் முன்னுரிமை வழங்கியதாக ஈராக்குக் கானஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் மேற்குப் பிராந்தியம் மிகவும் குறுகிய வீதிகளைக் கொண்டுள்ளது. அது மிகவும் பெரிய சவாலாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மொசூலின் மேற்குப் பிராந்தியத்தை மீட்கும் படை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளமை தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களை ஈராக் படையினர் விநியோகித்துள்ளனர்.

ஈராக்கில் ஐ.எஸ். ஆயுததாரிகளின் இறுதிப் பலமிக்க பகுதியாகக் காணப்படும் மொசூலை மீட்கும் படை நடவடிக்கை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)




## உளவு பார்க்கும் பொம்மைகள்

ஜேர்மனியில் விற்பனையாகும் மைப் ரண்ட் கைலா என்ற பெயரில் விற்கப்படும் பொம்மைகள் உளவு வேலைக்குப் பயன்படுத்தப்படலாம் என்று அந்த நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தநாட்டுத்தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்-

அந்தப் பொம்மையில் உள்ள மைக் மூலம் குடும்பத்தினரின் தனிப்பட்ட தகவல்கள் திருடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ப்ளூடூத் மூலம் இணையத்துடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அந்தப் பொம்மை, அதனிடம் கேட்கப்படும் கேள்விக்கான பதிலை இணையத்தின் உதவியுடன் அளிக்கும். இந்த வசதியைப் பயன்படுத்தி குடும்பங்கள் உளவு பார்க்கப்படலாம் என்று தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று அளித்த முறைப்பாட்டை விசாரித்த ஜேர்மனின் தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் அந்தவகைப் பொம்மைகளில் இருக்கும் மைக்கை உடனடியாக அகற்றும்படி பெற்றோருக்கு அறிவுரை வழங்கியுள்ளது. (எ)

## வடகொரிய தூதரை திரும்ப அழைத்தது மலேஷியா

வட்கொரியாவுக்கான தமது நாட்டுத் தூதுவரை மலேஷியா மீள அழைத்துள்ளது.

வடகொரியத் தலைவர் கிம் ஜோன் உன்னின் ஒன்று விட்ட சகோதரரான கிம் ஜோங் நம், மலேஷியாவில் கொலை செய்யப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிம் ஜோங் நம், கடந்த வாரம் கோலாலம் பூரில் வைத்து மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

விமானத்துக்காகக் காத்திருந்த போது விஷம் தெளித்து அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

விரோத சக்திகளுடன் மலேஷியா கைகோத்துச் செயற்படுவதாக கடந்த வாரம் வடகொரியத் தூதுவர் கூறிய கருத்துக் குறித்தும், விளக்கம்கோரி மலேஷியா அழைப்பாணை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கார்க் குண்டுத் தாக்குதலில் 39 பேர் உடல் சிதறிச் சாவு!

## சோமாலியா சந்தையில் நடைபெற்ற பயங்கரம்

மொகாடிசு, பெப்.21

சோமாலியாவில் சந்தை ஒன்றில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 39 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 50 பேர் காயம் அடைந்தனர்.

சோமாலியாதலைநகர் மொசாடிசுவில் நகரின் மையப்பகுதியில் சந்தை உள்ளது. அங்கு அதிகளவில் பொதுமக்கள் கூடுவார்கள். நேற்றுமுன் தினம் அங்கு திடீரெனப் புகுந்தது வேகமாக வந்த கார் அதை அடுத்து பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன.



இந்தச் சம்பவத்தில் அந்தச்சந்தை முழுவதும் அடியோடு இடிந்து தரைமட்டமாகியது. அங்கிருந்த கடைகள். கட்டடங்கள் அழிந்தன. இந்தத்தாக்குதலில் 39 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அனைவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை சோமாலியாவில் இந்த மாதம் தான் புதிய ஜனாதிபதியாக முகமது அப்துல்லாகி முகமது தெரிவு செய்யப்பட்டார். இந்த நிலையில் அங்கு பயங்கரக் குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால் அல்ஷ பாப் தீவிர வாதிகள் இதில் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேலும் அந்தச்சந்தையில் இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைக் குறி வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## சர்வதேச ஆயுத விற்பனை அதிகரிப்பு

சர்வதேச ஆயுத விற்பனை எப்போதும் இல்லாத அளவு தற்போது அதிகரித்துள்ளதாக புதிய அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

2012-2016 ஆண்டு வரையான காலப்பகுதியிலான முக்கிய ஆயுதங்களின் உலக அளவிலான மொத்த இறக்குமதி தற்போதைய காலத்துக்கு முந்தைய 5 ஆண்டு காலத்தோடு ஒப்பிடுகையில் 8 சதவீதம் அதிகரித்திருப்பதாக ஸ்டாக்ஹோம் என்ற சர்வதேச அமைதிஆய்வுநிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மொத்த ஆயுதக் கொள்முதலில் மூன்றில் ஒரு பகுதியை மத்திய கிழக்கு நாடுகளும், வளைகுடா நாடுகளும் செய்துள்ளன. உலகிலேயே இந்தியாவுக்கு அடுத்ததாக ஆயுதங்கள் அதிகமாக இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடாக சவூதி அரேபியா மாறியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயுத விற்பனையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய ஐந்து நாடுகளும் 75 சதவீத ஆயுத ஏற்றுமதியை வழங்கியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# விண்வெளி ஆய்வகத்தில் முட்டைகோஸ் அறுவடை!

நியூயோர்க், பெப்.21

விண்வெளி ஆய்வகத்தில் முதன் முறையாக முட்டைகோஸ் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக நாசா விண்வெளி மையம் தெரிவித்தது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து விண்வெளியில் ஆய்வகம் அமைத்து வருகின்றன. அங்கு 4 மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் 3 வீரர்கள் சென்று தங்கி பணிபுரிந்து வருகின்றனர்.

அங்கு தங்கியிருக்கும் வீரர்களின் உணவுக்காக சில காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. புவியீர்ப்பு சக்தி எதுவும் இல்லாத விண் வெளியில் நவீன தொழில்நுட்ப முறையில் இவை பயிரிடப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு அமெரிக்க விண்வெளி வீரர் பெக்கி விட்சன் என்பவர் தொக்யோ பெகொனா என்று அழைக்கப்படும் சீன முட்டைகோஸை பயிரிட்டார். தற்போது அது சிறந்த முறையில் விளைந்துள்ளது.

அதைத் தொடர்ந்து சமீபத்தில் முட்டைகோஸ் அறுவடை செய்யப்பட்டது. இதன்மூலம் சீன முட்டைகோஸ் விண் வெளியில் பயிரிடப்பட்டுள்ள 5 ஆவது பயிர் ஆகும். (எ)

# ஹிட்லர் பயன்படுத்திய தொலைபேசி 2 லட்சத்து 43 ஆயிரம் டொலருக்கு ஏலம்!

நியூயோர்க், பெப்.21

உலகின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த ஹிட்லரின்தனிப்பட்ட தொலைபேசி 2 லட்சத்து 43 ஆயிரம் டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

மேரிலேண்ட் நிறுவனம் அமெரிக்காவில் இடம்பெற்ற இந்த ஏலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.



எனினும், இந்தத் தொலைபேசியை வாங்கியவரின் விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

நாஜிக்களின் தலைவரான அடோல்ப் ஹிட்லரின் பெயர், ஒரு ஸ்வஸ்திகை அடையாளம் மற்றும் நாஜிக்களின் அடையாளமான பருந்து ஆகியவை பொறிக்கப்பட்டுள்ள சிவப்பு நிறத் தொலைபேசி 1945 ஆம் ஆண்டு பேர்ளினின் பதுங்கு குழியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

எல்லா காலத்துக்கும் மிகவும் அழிவுக்குரிய ஆயுதம் என்று இந்த தொலைபேசியை ஏலமிட்டுள்ள மேரிலேண்டிலுள்ள ஏல நிறுவனம் விவரித்துள்ளது. (எ)

# கொலம்பியாவில் எருதுச் சண்டையில் தாக்குதல்; 26 பேர் காயம்

கொலம்பியாவில் எருதுச் சண்டைப் போட்டியில் நடைபெற்ற வெடி குண்டுத் தாக்குதலில் 26 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

ஆபிரிக்க நாடான கொலம்பியா தலைநகரில் எருதுச் சண்டை நடைபெற்றது. ஏற்கனவே தடைசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியை மீண்டும் நடத்த கடந்த மாதம் தான் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கு ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் போகோடாவில் எருதுச் சண்டை போட்டி நடைபெற்றது. அதைப் பார்க்க ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் போராட்டம் நடத்தினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது வெடி குண்டுகளை வீசி தாக்குதல்கள் நடத்தப் பட்டன. அதில் 26 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 24 பொலிஸார் அடங்குவர். (எ)

# மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் 2017: இலங்கை, பாகிஸ்தான் அணிகள் தகுதி!

கொழும்பு,பெப்.21

இங்கிலாந்தில் இவ் வருடம் நடைபெறவுள்ள மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு கடைசி இரண்டு அணிகளாக இலங்கையும் பாகிஸ்தானும் தகுதிபெற்றுள்ளன.

பங்களாதேஷுக்கு எதிரான மகளிர் உலகக் கிண்ணத் தகுதிகாண் சுப்பர் 6 சுற்றின் கடைசிப் போட்டி யில் டக்வேர்த் லூயிஸ் விதிகளின் பிரகாரம் 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடு வதை இலங்கை மகளிர் அணி உறுதி செய்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை மகளிர் அணி, சமிர அத்தப்பத்துவின் அபார அரைச் சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

114 பந்துகளை எதிர் கொண்ட சமிர அத்தப்பத்து ஒரு சிக்ஸர், 8 பவுண்டரி கள் அடங்கலாக 84 ஓட்டங் களைப் பெற்றார். அவருக் குப் பக்கபலமாகத் துடுப் பெடுத்தாடிய ஹசினி பெரேரா 32 ஓட்டங்களைப் பெற்றதுடன் இரண்டாவது விக்கெட்டில் 50 ஓட்டங்




களை சமிர அத்தப்பத்து வுடன் பகிர்ந்தார்.

இலங்கை மகளிர் அணி யின் மத்திய வரிசையில் மீண்டும் ஏற்பட்ட தடுமாற் றம் காரணமாக கணிசமான ஓட்டங்களைக் குவிக்கும் வாய்ப்பு அற்றுப்போனது.

இலங்கையின் மொத்த எண்ணிக்கையில் 23 உதிரி கள் அடங்கியிருந்தன. பங்களாதேஷ் மகளிர் பந்து வீச்சில் சல்மா காத்துன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ் 21 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 68 ஓட் டங்களைப் பெற்றிருந்த போது மழை பெய்ததன் காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் டக்வேர்த் லூயிஸ் விதிகளின் பிரகாரம்



பங்களா தேஷின் வெற்றி இலக்கு 111 ஓட்டங்களாக இருந்தன.

அதன் பின்னர் ஆட்டம் தொடராததை அடுத்து இலங்கை மகளிர் அணிக்கு வெற்றி அளிக்கப்பட்டது. ஆட்டநாயகியாக சமிர அத்தப்பத்து தெரிவு செய் யப்பட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற மற்றுமொரு ஆட்டத்தில், மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு ஏற்க னவே தகுதிபெற்றிருந்த இந்தியா, பாகிஸ்தானுட னான சுப்பர் 6 போட்டியில் 7 விக்கெட்டுக்களால் இலகு வாக வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் பாகிஸ் தான் மகளிர் தோல்வி அடைந்தபோதிலும் மகளிர் உலகக் கிண்ணப் போட்டி யில் விளையாடுவதற்கான தகுதியையும் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் 43.4 ஓவர்களில் 67 ஓட்டங் களில் சுருண்டது. இந்திய சுழற்பந்து வீச்சாளர் எக்தா பிஷ்ட் 10 ஓவர்களில் 7 மெய்டனுடன் 8 ஓட்டங் களை மட்டுமே விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டு களை சாய்த்து பிரமிக்க வைத்துள்ளார்.

தொடர்ந்து ஆடிய இந்தியா 22.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 70 ஓட்டங் களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் எளிதில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகியாக எக்தா பிஷ்ட் தெரிவு செய்யப்பட் டார்.

இதேவேளை, மற்றுமொரு போட்டி தென்னாபிரிக்க மகளிர் அணிக்கும் அயர் லாந்து மகளிர் அணிக்கும் இடையில் நடைபெற்றுள் ளது. இந்த சுப்பர் 6 போட்டி யில் தென்னாபிரிக்க மகளிர் அணி டக்வேர்த் லூயிஸ் விதிகளின் பிரகாரம் 36 ஓட்டங் களால் வெற்றி பெற்றது.

சூப்பர் சிக்ஸ் முடிவில் முதல் 4 இடங்களை பிடித்த இந்தியா (10 புள்ளி), தென்னாபிரிக்கா (8 புள்ளி), இலங்கை (6 புள்ளி), பாகிஸ்தான் (4 புள்ளி) ஆகிய அணிகள் ஜூன் மாதம் நடக்கும் பெண்கள் உலக கோப்பை-போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

# அசேலவுக்கு ஜனாதிபதி வாழ்த்து!

கொழும்பு, பெப்.21

ஆஸ்திரேலிய அணியை வெற்றிகொள்வதற்கு மிகவும் முக்கிய பங்காற் றிய இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அசேல குணரத்னவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட வாழ்த் துக்களைத் தெரிவித்துள் ளார்.

மேலும், வரலாற்று வெற்றியைப் பெற்று இலங்கை அணிக்கும் தனது வாழ்த்துக்களை ஜனாதிபதி தெரிவித்துள் ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட் டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

இந்தத் தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற 2 ஆவது இருபதுக்கு 20



போட்டியில் 2 விக்கெட்டு களால் ஆஸ்திரேலிய அணியை வெற்றி கொண்டது. இதன்மூலம் இந்தத் தொடரையும் தன்வசப்படுத்தியுள்ளது.

இந்தநிலையிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இருபதுக்கு 20 தொடரில் 2-0 என வெற்றிபெற்று தொடரை தன் வசப்படுத் திய இலங்கை அணிக்குத் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியை நேற்றைய தினம் தொலைபேசி ஊடாக தொடர்புகொண்ட ஜனாதிபதி, தனது வாழ்த் துக்களை தெரிவித்துக் கொண்டதுடன், இலங்கை கிரிக்கெட் அணி இந்த வரலாற்று வெற்றியின் மூலம் இலங்கைக்கு பெருமையைத் தேடித் தந் துள்ளது என்றும் போட்டி யில் தனது திறமையை சிறப்பாக வெளிக்காட்டிய அசேல குணரத்னவுக்கு விசேட வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் தலைவர் பதவியை பறிகொடுத்தார் டோனி!

சென்னை, பெப்.21

இண்டியன் பிரீமியர் லீக் போட்டிகளில் கடந்த வருடம் புனே அணி பிரகாசிக்கத் தவறியதால் டோனி அந்த அணியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஆஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித் புதிய அணித் தலைவராக நியமிக் கப்பட்டுள்ளார் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னை மற்றும் ராஜஸ் தான் அணிகளுக்கு தடை விதிக்கப்பட்டமையை அடுத்து சென்னை வீரர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட புனே அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.


இதன் பிரகாரம் சென்னை அணியின் தலைவராக இருந்த டோனி 12.5 கோடி இந்திய ரூபாவுக்கு ஒப்பந் தம் செய்யப்பட்டார்.

ஆனால், கடந்த வருடம் அவரது தலைமையில் புனே அணி மோசமான தோல்விகளை அடைந் தது.

எனவே, இவ் வருடம் அவரிடம் தலைமைப் பதவியை ஒப்படைப்ப தில்லை என புனே உரிமை யாளர்கள் தீர்மானித்தனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.



# 21 வருட கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து அதிரடியாக ஓய்வுபெறுகிறார் சாஹித் அப்ரிடி!



ஷார்ஜா, பெப்.21

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான சாஹித் அப்ரிடி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தான் ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்துள்ளார்.

கடந்த 21 வருடங்களாக பாகிஸ்தான் அணிக்காக கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று வந்த 36 வயதான அப்ரிடி தலை சிறந்த வீரர் என்பதுடன் பல்வேறு சர்ச்சைகளிலும் அவ்வப்போது சிக்கிவந்தார்.

இந்நிலையில் அவர் தனது 21 வருட கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தனது டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு விடை கொடுத்த அப்ரிடி, கடந்த 2015 ஆம் ஆண்டு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கும் விடை கொடுத்தார்.

அதையடுத்து அவர் இருபதுக்கு 20 போட்டிகளில் மாத்திரம் விளையாடி வந்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண இருபதுக்கு 20 தொடரில் பாகிஸ்தான் இருபதுக்கு 20 அணியின் தலைவராகச் செயல்பட்ட அப்ரிடி தொடர் நிறைவடைந்ததும் தனது அணித் தலைமைப் பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில், தொடர்ந்து இருபதுக்கு 20 போட்டித் தொடர்களில் விளையாடி வந்த சாஹித் அப்ரிடி நேற்று அதிலிருந்தும் ஓய்வுபெறுகிறேன் என்று அறிவித்துள்ளார். இதன் மூலம் அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் களமிறங்கிய அப்ரிடி, இலங்கை அணிக்கெதிரான தனது 2 ஆவது போட்டியில், 37 பந்துகளில் சதமடித்து உலக சாதனை படைத்தார். இச் சாதனை 19 ஆண்டுகளின் பின்னர் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

27 சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சாஹித் அப்ரிடி 1176 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதிகபட்சமாக 156 ஓட்டங்களையும் 48 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். 398 ஒரு நாள் போட்டிகளில் 8064 ஓட்டங்களை குவித்துள்ள சாஹித் அப்ரிடி அதிகபட்சமாக 124 ஓட்டங்களையும் 395 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

இதேவேளை, சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளில் 98 போட்டிகளில் விளையாடியுள்ள அப்ரிடி 1405 ஓட்டங்களையும் 97 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஐ.பி.எல்.ஏலம்:

# பென் ஸ்டோக்ஸை 14.5 கோடி ரூபாவுக்கு வாங்கியது புனே அணி

பெங்களூர், பெப்.21

பெங்களூரில் நடைபெற்ற ஐ.பி.எல். வீரர்கள், ஏலத்தில் இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸை 14.5 கோடி இந்திய ரூபாவுக்கு புனே அணி ஏலம் எடுத்துள்ளது.

10 ஆவது ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் மே 21 ஆம் திகதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இடம்பெறவுள்ளது. இதையொட்டி 43 வெளிநாட்டினர் உட்பட 139 வீரர்கள் 8 அணிகளால் தக்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் கழற்றி விடப்பட்டனர்.

அணிகளால் விடுவிக்கப்பட்டவர்கள், புதியவர்கள் என்று 130 வெளிநாட்டவர் உட்பட மொத்தம் 357 வீரர்கள் இந்த முறை ஏலப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்று ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று முன்தினம் தெரிவித்தது. இதில் 227 பேர் எந்த சர்வதேச போட்டிகளிலும் விளையாடாதவர்கள் ஆவர்.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஐ.பி.எல். வீரர்களின் ஏலம் பெங்களூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நேற்றுக் காலை தொடங்கியது.

இந்த ஏலத்தில் இங்கிலாந்து வீரர் இயன் மோர்கனை அடிப்படை விலையான 2 கோடி ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. பவன் நெஹியை பெங்களூர் அணி 1 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்துள்ளது. மத்யூஸை டெல்லி டேர்டெவில்ஸ் அணி 2 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தது.

இங்கிலாந்து அணியின் துணைத் தலைவர் பென் ஸ்டோக்ஸை ஏலம் எடுக்க மும்பை இந்தியன்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ், ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட்ஸ் அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் பென் ஸ்டோக்ஸை புனே அணி 14.5 கோடி இந்திய ரூபாவுக்கு ஏலம் எடுத்துள்ளது. இதுவே அதிகபட்ச ஏலத்தொகையாக உள்ளது.

மேலும், இங்கிலாந்து வீரர் டைமல் மில்ஸை 12 கோடி ரூபாவுக்கு ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி வாங்கி வியக்க வைத்துள்ளது.

# போட்டியின் இடைநடுவே ஆரோனுடன் சிங்களத்தில் உரையாடிய ரசல் ஆர்னல்ட்!





கீலாங், பெப்.21

இலங்கை அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான ரசல் ஆர்னல்ட், ஆஸ்திரேலிய அணியின் தலைவரான ஆரோன் பின்ச்சை 'பின்சி மச்சாங்' என சிங்களத்தில் அழைத்தமை இலங்கை ரசிகர்களை குதூகலப்படுத்தியுள்ளது.

வீரர்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவாறு, வர்ணனையாளர்களிடம் உரையாடுவது தற்போதைய இருபதுக்கு 20 போட்டிகளில் சகஜமாகி வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை- ஆஸ்திரேலியா இடையிலான இருபதுக்கு இருபது போட்டி இடம் பெற்றது.

இந்தப் போட்டியின் போதும் வீரர்களுக்கும் வர்ணனையாளருக்கும் இடையில் உரையாடல்கள் இடம்பெற்றன.

அவ்வாறு உரையாடும் போது, வர்ணனையாளர் ரசல் ஆர்னல்ட், ஆரோன் பின்ச்சிடம் 'பின்சி மச்சாங், இட்ஸ் ரசல், கோஹமத?'(பின்சி மச்சான், நான் ரசல், சுகமாய் இருக்கிறாயா?) என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஆரோன் பின்ச், 'ஹலோ மச்சான்' என்று கூறினார்.

இந்தச் சம்பவம் ரசிகர்களின் குதூகலத்தை மேலும் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# விளம்பரத்தில் நடிப்பதற்காக கோஹ்லிக்கு கிடைக்கும் தொகை 110 கோடி இந்திய ரூபா!


மும்பை, பெப்.21

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி ஒரு விளம்பரத்தில் நடிப்பதற்காக மாத்திரம் 110 கோடி இந்திய ரூபாவுக்கு ஒப்பந்தமாகி உள்ளார்.

இந்திய வீரர் ஒருவர் ஒரே விளம்பரத்தில் அதிக தொகைக்கு ஒப்பந்தம் ஆகியிருப்பது இதுவே முதன்முறையாகும்.

விராட் கோஹ்லி தனது ஆட்டம் மூலமாக மட்டுமல்லாமல் விளம்பரங்கள் வாயிலாகவும் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து வருகிறார்.

சர்வதேச விளையாட்டு நிறுவனமான 'பூமா' விராட் கோஹ்லியை 8 ஆண்டுகளுக்கு 110 கோடி இந்திய ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்திய விளையாட்டு வீரர் ஒருவர் ஒரே விளம்பரத்தில் இவ்வளவு அதிகமான



தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்படுவது இதுவே முதன் முறையாகும். இது புதிய சாதனையாகக் கருதப்படுகிறது.

டெண்டுல்கர், டோனி ஆகியோர் பல விளம்பர நிறுவனங்களில் சேர்ந்து தான் 100 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் ஒப்பந்தமாகி இருந்தனர். 24 ஆண்டு காலம் விளையாடிய சச்சின் டெண்டுல்கர் 50 விளம்பர நிறுவனங்கள் மூலம் 500 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் ஒப்பந்தமாகி இருந்தார்.

இதே போல் டோனியும் பல விளம்பர நிறுவனம் மூலம் 180 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் ஒப்பந்தம் ஆகி இருந்தார்.

விராட் கோஹ்லி ஒப்பந்தமாகி உள்ள 'பூமா' நிறுவனத்தில் பிரபல தடகள வீரர்களான உசைன் போல்ட், ஆசபா போவெல் (ஜமைக்கா), உதைபந்து வீரர்கள் ஹென்றி, ஒலிவர் ஆகியோர் ஏற்கனவே விளம்பர தூதுவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோம். இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்கான தீர்வை எட்டுவதில் இனிமேலும் காலத்தை இழுத்தடிக்க முடியாது. உலகம் பார்த்திருக்கின்றது. இந்த ஆண்டுக்குள் எப்படியும் தீர்வு வேண்டும். அதனை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறி வைப்போம்.

அடுத்தது – வடக்கு, கிழக்கில் நாங்கள் (இந்தியா) பல்வேறு பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கின்றோம். குறிப்பாக பாதை, வீதிப் போக்குவரத்து, பாலம் அமைப்புப் போன்ற உள்ளகக் கட்டுமானப் பணிகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இங்கு (வடக்கு, கிழக்கில்) முன்னெடுக்க இருக்கின்றோம். அவற்றுக்கு உங்களின் முழு ஒத்துழைப்பு வேண்டும். அதனை எதிர்பார்க்கின்றோம்." – என்றார் வெளிவிவகாரச் செயலாளர்.

அதற்குப் பதிலளித்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மிக இலேசான பாணியில் "ஒத்துழைப்பு விடயத்தில் என்ன பிரச்சினை இருக்கமுடியும். எங்கள் ஆதரவும், ஒத்துழைப்பும் எப்போதும் இந்தியாவுக்கு உண்டுதானே....!" – என்ற சாரப்படப் பேச முயன்றார்.

உடனடியாகக் குறுக்கிட்டார் இந்தியச் செயலாளர்.

"உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை, எதிர்ப்பு இருந்தால் எங்களுடன் வெளிப்படையாகப் பேசுங்கள். கூறுங்கள். இரட்டை நிலைப்பாடு வேண்டாம். சம்பூர் விடயம் எல்லாம் எப்படி நடந்தது என்பது எமக்குத் தெரியும். அது பற்றி இனிமேல் பேசிப் பயனில்லை. உங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொல்லுங்கள்." – என்று முகத்தில் அடித்தாற்போல் பதில் சொன்னார் அவர்.

சம்பந்தனின் சொந்த மாவட்டமான திருகோணமலையில் சம்பூர் அனல் மின்சாரத் திட்டம் இந்தியாவின் நேரடிப் பங்களிப்புடன் ஆரம்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்காக அப்பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களின் சம்பூர்க் காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

அந்தக் காணி சுவீகரிப்புக்கும், அனல் மின்சார நிலையத் திட்டத்திற்கும் எதிராக உள்ளூரில் சமூக எதிர்ப்புக் கிளம்பியது. அதனால் இப்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

அத்திட்டம் கைவிடப்பட்டமை இலங்கையில் அண்மைக் காலத்தில் தனக்குக் கிடைத்த பெரும் பின்னடைவுகளில் ஒன்று என இந்திய அதிகார வர்க்கம் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பூர் விடயத்தில், சம்பந்தனும், கூட்டமைப்பும் இந்தியாவுக்கு ஆதரவு தரும் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக எடுக்கவில்லை என்ற கடுப்பில் இருக்கும் இந்தியா, அதற்கு அப்பாற்போய் மேலும் சம்பூர் அனல் மின்சார நிலைய அமைப்புக்கு எதிரான செயற்பாட்டில் கூட்டமைப்பின் சில தரப்புகளின் கைகள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றும் சந்தேகிக்கின்றதாம்.

தவிரவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிடியில் இருக்கும் சில ஊடகங்கள் கடும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைச் சந்தர்ப்பவாதமாக முன்னெடுத்து வருகின்றன என்று கருதும் புதுடில்லி, தாம் வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தித் திட்டப் பணிகளை முன்னெடுக்கும்போது,. அதனால் சில அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என்றும் கருதுவதாகவும் தெரிகின்றது.

எந்தத் தேவையுமின்றி இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைப் பிரதிபலித்து, தமிழ் மக்கள் மத்தியில் பாரத எதிர்ப்புப் போக்கை நீடிக்கச் செய்து வரும் ஊடகங்களைச் சம்பந்தன் தரப்பு தனது கைக்குள் வைத்துக்கொண்டும் ஏதும் செய்யாமல், அதே வேளை, தமது தேவைகளுக்கு மட்டும் அத்தரப்பை லாவகமாகப் பயன்படுத்திக்கொண்டு பார்த்திருப்பதாகவும் இந்தியா கருதுகின்றதாம்.

ஒரு புறம் அதனைச் சுயாதீன ஊடகங்களாகக் காட்டிக்கொண்டு, மறுபுறம் கூட்டமைப்பு ஊதுகுழலாகவும் பயன்படுத்தும் கூட்டமைப்புத் தலைமையின் மீதான எதிர்ப்பே நேற்றைய பேச்சில் அப்பட்டமாக – வெளிப்படையாக – இந்திய வெளிவிவகார அதிகார வர்க்கத்தினால் சம்பந்தனுக்குப் பிரதிபலித்துக் காட்டப்பட்டதாக அறிய வந்தது. (உ)

## எல்லாவற்றையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் உயிரிழந்தார்கள். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு – கிழக்கு இணைப்புத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை இந்தியா இப்போது வலியுறுத்த வேண்டும்." – என்ற சாரப்பட சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

"இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் இன்று இலங்கையினால் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தம் இன்னும் நடைமுறையில் இருக்கின்றது எனக் கருதுகின்றீர்களா?" – என்றும் அவர் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த இந்தியச் செயலாளர் "இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுப் பல வருடங்களாகிவிட்டன. பல விடயங்கள் நடந்துவிட்டன. ராஜீவ் காந்தியே கொல்லப்பட்டுவிட்டார்." – என்றார்.

"எனவே, நீங்கள் யதார்த்தத்தின் அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். கள நிலைமைக்கு வாய்ப்பான விவகாரத்தையே கேட்கவேண்டும். இணைப்பு விடயத்தில் இன்று கிழக்கில் முஸ்லிம்களின் இருப்பும் ஒரு விவகாரம்.

"அரசியலில் கிடைக்கின்ற – திறக்கின்ற – ஜன்னல்கள் வழியாக முடிந்ததை ஒப்பேற்றி நகர்த்த வேண்டும். முழுமையாக நகர்த்துவதற்குக் கதவு முற்றாகத் திறக்கும் என்று பார்த்திருக்கக்கூடாது. அதுதான் இப்பிரச்சினையில் விடயம் நகர முடியாமல் இக்கட்டில் சிக்கியிருப்பதற்குக் காரணம்.

''இப்போது கிடைத்திருக்கின்ற வாய்ப்பைத் தீவிர நிலைப்பாடு எடுத்து குழப்பினால், யாருடைய கை ஓங்கும்? அப்படியான தரப்புகளிடம் மீள ஆட்சி போகுமானால் எதையாவது நீங்கள் பெற முடியுமா?" – என்ற சாரப்பட வெளிவிவகாரச் செயலாளர் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு ஆலோசனை கூறினார் எனத் தெரிகின்றது.

"ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் '13 பிளஸ்' என்பதாகவே இந்தியாவின் நிலைப்பாடு தோன்றுகின்றது." – என சந்திப்புக்குப் பின்னர் அதில் கலந்துகொண்ட தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் ஒருவர் காலைக்கதிருக்குத் தெரிவித்தார். (உ)

## ஆயுதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைகளை அடைந்தோம் என்று சிலர் கேட்கின்றார்கள் என்று கடிந்துகொண்ட அவர், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பதவிகளைப் பெறுவதற்கும் மாகாண சபை வந்த மைக்கும் அந்தப் போராட்டமும் தியாகங்களும் தான் காரணம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது என்றும் கூறினார்.

வவுனியா மண்ணில் இருந்து தானும் ஒரு போராளியாகப் புறப்பட்டவர் என்பதை நினைவுபடுத்திய சிவசக்தி ஆனந்தன், அதனால், அந்த ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

வவுனியா – ஓமந்தையில் நேற்று விவசாயிகளுடன் இடம்பெற்ற விவசாயிகளுடனான சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காக எங்களிடம் ஆதரவு கேட்டு வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருந்தது.

ஆனால், அவ்வாறு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டாம் என எங்கள் கட்சி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கூறியது. அதைக் கூட்டமைப்புத் தலைமை ஏற்கவில்லை. அதன் விளைவாக இன்று வரை நாம் இந்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியாமல் – எதையும் பேரம்பேசி செய்யமுடியாமல் – இருக்கின்றது.

இதனாலேயே மக்கள் தமது உரிமைக்காக தாமாகவே வீதியில் இறங்கியுள்ளார்கள். கேப்பாபிலவு மக்கள் 21 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அவர்கள் தமது சொந்த நிலங்களில் வாழ நாம் உதவவேண்டும்.

30 வருட ஆயுதப் போராட்ட தியாகங்களை நாம் மறந்துவிடமுடியாது. அமெரிக்காவும், இந்தியாவும் யுத்தம் முடிந்தபின் ஓர் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று எங்களுடைய காலடியை நோக்கி வந்தமைக்கு கூட போராட்டமும் தியாகங்களும் தான் காரணம். எங்களது போராட்டங்கள், அதன் தியாகங்கள் எல்லாம் வீண் போய்விட்டன, அதனால் ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்வது அப்பட்டமான பொய்யான விடயம். – என்றார்.

இதேவேளை, நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ரெலோ செயலாளர் நாயகமும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் –

முப்பது வருடங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நாங்கள் முப்படைகளை வைத்திருந்தும் எதையும் சாதிக்கமுடியவில்லை. ஆனால், சம்பந்தன் ஒரு வருடத்தில் (2016) தீர்வைப் பெற்றுத் தரவில்லை என்று இப்போது அவரைச் சாடுகின்றோம். முப்பது வருடங்களில் பெற முடியாததை எப்படி ஒரு வருடத்தில் பெற முடியும்? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.


நாங்கள் முப்படைகளையும் வைத்திருந்த போதிலும் சர்வதேசத்தில் ஒரு நாட்டைக் கூட எங்களது பக்கம் வைத்திருக்கவில்லை. அந்த பலவீனம்தான் இன்றைக்கு எங்களை அழித்திருக்கிறது. சர்வதேசத்தை நாங்கள் மதிக்காத தன்மையால், இவர்களை அடக்க முடியாது என்று நினைத்து சர்வதேசம் எங்களை அழித்தது. – என்றும் அவர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-100)

## முல்லை. மாவட்ட செயலகம் முன்பாக நாளை கவனயீர்ப்பு

கேப்பாபிலவு – பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு ஆதரவு தெரிவித்து நாளை புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தந்து போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-81)

## மல்லாவியில் விபத்து



மல்லாவி, பெப்.21

மல்லாவி நகரப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் 'கெப்' வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். காயமுற்றவர் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (உ)

## காலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்த சமயம் இந்த நிலைப்பாட்டைத் திட்டவட்டமான மொழியில் தெரியப்படுத்தியதாக நம்பகரமாக அறிய வந்தது.

முன்னதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைக் கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் சந்தித்த சமயமும், இத்தகைய தீர்க்கமான செய்தி ஒன்றைத் தாங்கள் இலங்கைத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்த இருக்கின்றார்கள் என்பதை ஜெய்சங்கர் தலைமையிலான குழுவினர் தமிழ்த் தலைவர்களுக்குக் கோடி காட்டினர்.

'உலகம் இங்கு நடப்பவற்றை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. எல்லா நாளும், எல்லாத் தரப்புகளையும் காலத்தை இழுத்தடித்துப் பார்த்திருக்க வைக்க முடியாது. நடந்தவை போதும். இனி விடயத்துக்கு முடிவுக்கு வாருங்கள்.' – என்ற செய்தியை நாம் இலங்கை அரசுத் தரப்புக்குச் சொல்லவுள்ளோம். – இப்படி இந்தியக் குழுவினர் தமிழ்த் தலைவர்களிடம் தெரியப்படுத்தினர்.

இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய வெளியுறவுச் செயலருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையுடன் இந்தியா மேற்கொள்ளப்படவுள்ள புதிய இருதரப்பு ஒப்பந்தங்கள், திருகோணமலை மற்றும் வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பின்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யனக் கலவை அடங்கிய அரிசியை விற்பனை செய்தல் போன்ற மோசடிகள் இடம்பெற்றால், நுகர்வோர் மற்றும் நலன் விரும்பிகள் மேற்படி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை அந்த தொலைபேசி இலக்கம் இயங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இதைக் கூறினார். (ம)

## அரசமைப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் வலியுறுத்தப்பட்டது.

கொழும்பு வந்திருக்கும் இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், வெளிவிவகார அமைச்சின் துணைச் செயலாளர், கொழும்புக்கான இந்தியத் தூதுவர் ஆகியோரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக் குழு நேற்றுக் காலை கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் சந்தித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றி னர்.

'பேச்சின் நடுவே இன்றைய சூழலில் உங்களின் எதிர்பார்ப்பு என்ன, முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுங்கள்' என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் கேட்டார்.

அச்சமயமே கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் அரசமைப்புப் பேரவை பற்றிய விடயங்களைப் பிரேரித்தார்.

''அரசமைப்புப் பேரவை தனது பணிகளைத் துரிதமாக ஆரம்பித்தது. வழிபாட்டுக் குழு நியமிக்கப்பட்டது.

அது நாற்பதுக்கும் அதிக தடவைகள் கூடி பல்வேறு விடயங்களை அலசியது. நல்ல முன்னேற்றங்கள் இருந்தன. ஆனால் எல்லாம் இப்போது தடைப்பட்டுவிட்டன,

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள கூட்டு எதிரணியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வேறு விடயம்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அணியில் உள்ள அமைச்சர்களே இப்போது போர்க்கொடி தூக்கியிருக்கின்றார்கள். இது ஜனாதிபதியின் அனுமதியின்றி நடத்த முடியாது. எனவே அரசமைப்புப் பேரவை நடவடிக்கைகளை முட்டுக்கட்டை போட்டு முடக்குவதை விடுத்து, அதனை விரைந்து முன்னெடுத்துச் செல்லும்படி ஜனாதிபதி சிறிசேனவுக்கு நேரடியாக அழுத்தங்கள் கொடுங்கள்." என்றார் சுமந்திரன்.

அவரது கருத்தை அரசுத் தலைமைக்கு வெளிப்படையாக எடுத்துரைப்பதான உறுதிமொழி இந்தியத் தரப்பில் வழங்கப்பட்டதாக அறிய வந்தது.

அதேசமயம்,

இலங்கை விவகாரத்தை இந்தியாவும், அமெரிக்காவும், ஜப்பானும் கூட்டாகக் கையாளும் நிலைமை இருக்கின்றது என்பதும் இந்தியத் தரப்பினால் கூட்டமைப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும் அறிய வந்தது.

முன்னதாக –

வடக்கு, கிழக்கில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழரின் பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை போன்றவை தொடர்பில் அரசின் செயற்றின்மை தொடர்பில் தமது கடும் அதிருப்தியையும் கரிசனையையும் சம்பந்தன் இந்தியத் தரப்புக்கு எடுத்து விளக்கியிருந்தார். (உ)

# தெற்காசிய கொள்முதல் மாநாடு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

கொழும்பு, பெப்.21

இலங்கைக்கு பெருமையைத் தேடித்தரும் தெற்காசிய பிராந்திய நான்காவது கொள்முதல் மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பில் ஆரம்பமானது.

இந்த மாநாடு நாளை மறுதினம்வரை கொழும்பிலும் கண்டியிலும் நடைபெறும்.

2011 ஆம் ஆண்டு நேபாளத்தின் காத்மண்டு நகரத்தில் ஆரம்பமானஇந்தக்கொள்முதல் மாநாடு, 2014 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிலும் அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு பங்களாதேஷின் டாக்காநகரிலும் நடைபெற்றது.

இலத்திரனியல் கொள்முதல் முறைமைக்கு எமது நாடு மாறவேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்துள்ள அரசு நான்காவது மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, நிதி அமைச்சு மற்றும் அரச நிதி திணைக்களம் ஆகியன இணைந்து இந்த மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன.

இந்தமாநாட்டின்தலைமைப் பதவியை வகிக்கும் பங்களாதேஷ் நாட்டின் பாரூக் ஹூசைன் இந்த முறை அந்தப் பொறுப்பை இலங்கையின் அல்கமவிடம் கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் ஆர். எச். எஸ். சமரதுங்க, இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இஸ்ஸாமிதி இடே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் சிகோவதி ஆகியோர் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரனும் கௌரவ விருந்தினர்களாக சிவகாமி மஹால் முகாமைத்துவப் பணிப்பாளர் தர்மராஜா பகீர், நல்லூர் பிரதேச செயலக வினையா ட்டு உத்தியோகத்தர் க.மயூரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

## தேர் வெள்ளோட்டம்

தென்மராட்சி, பெப்.21

மிருசுவில் - கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய தேர் வெள்ளோட்ட நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் உள்ள கன்னி லக்கின சுபவேளையில் இரத வெள்ளோட்டம் இடம் பெறவுள்ளது.

தரவையம்பதி ஆலயத்தின் பிரதம குரு வைரவநாத பராமாச்சாரிய குருக்களின் தலைமையில் நடைபெறவுள்ள வெள்ளோட்ட நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியரும் இந்து நாகரிகத்துறைத் தலைவருமான மா.வேதநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு, தென்மராட்சி கோட்டக்கல்வி அதிகாரி வ.நடராசா, வைத்தியர் வே.பரமநாதன், தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர், கெற்பேலி கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-21)

## விசேட தேவையுடையோர் தகவல் திரட்டும் செயற்றிட்டம் வவுனியாவில்!

### 64 குடும்ப நல உத்தியோகத்தருக்கு கைக் கணினிகள்





வவுனியா, பெப்.21

வவுனியாவில் விசேட தேவைக்குட்பட்டோரின் தகவல் திரட்டும் செயற்றிட்டத்தின் கீழ் களப்பணியில் ஈடுபடும் 64 பொது சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு கைக் கணினிகள் வழங்கப்பட்டன.

வவுனியா சுகாதார சேவைகள் பணிமனையில் விசேட தேவைக்குட்பட்டோரின் தகவல் திரட்டும் செயற்றிட்டம் நேற்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது இந்தக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தின் நான்காம் கட்டமே வவுனியாவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், வடமாகாண சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியர் கேசவன், குழுத் தலைவர் எஸ். சுபாகரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.பவானி, பொது சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்கள், பிராந்திய சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

## விவசாயக் குடும்பங்களின் மாணவர்களுக்கு உதவத் திட்டம்

### ஓமந்தை அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு

வவுனியா, பெப்.21

வவுனியா, ஓமந்தைப் பகுதி கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரிவுக்கு உட்பட்ட விவசாய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியை உயர்த்துவதற்காக ஓமந்தை கமநல கல்வி அபிவிருத்தி நிதியம் என்னும் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஓமந்தை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியாவில் அதிக விவசாயிகளைக் கொண்ட பகுதியாக ஓமந்தைப் பகுதி விளங்கிவரும் நிலையில், காலநிலை மாற்றங்கள் மற்றும் கடந்த காலப் போர் நடவடிக்கைகள் காரணமாக இந்தப் பகுதியில் இருந்து பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களும், கல்வியைத் தொடரும் மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

சில மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைவிட்டும் உள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதி மாணவர்களின் தொடர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் ஓமந்தை கமநல அபிவிருத்தி திணைக்கள பிரிவுக்குட்பட்ட விவசாயிகள், கல்வித்துறை சார்ந்தோர், வர்த்தக பிரிவினர் ஆகியோரை உள்ளடக்கி கல்விக்கான உதவியை வழங்கும் நோக்கோடு இந்த அமைப்பு உதயமாகியுள்ளது.

ஓமந்தைப் பகுதி கமநல அபிவிருத்தி திணைக்களத் தலைவர் ஏ.நாகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார், ஓமந்தைப் பகுதி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.திலீபன், கமநல திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், அந்தப் பகுதி பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)





# புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி திருட்டுத்தனமாக நிறைவேற்ற முயற்சி

### தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளரான முஸம்மில் விசனம்

கொழும்பு, பெப்.21

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனைத் திருட்டுத்தனமாக நிறைவேற்றுவதற்கே இந்த அரசு முயன்று வருகின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளரான மொஹமட் முஸம்மில் தெரிவித் தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையிலிருந்து மக்களைத் திசைத் திருப்புவதற்காகத் தான், சைட்டம் மற்றும் அரிசிப் பிரச்சினைகளுக்கு அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர்மேலும்தெரிவிக்கையில்:-

சபைமுதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, புதிய அரசமைப்புத் தொடர்பில் ஒரு வார்த்தைகூட சட்டமூலத்தில் அச்சிடப்படவில்லை என்று ஒரு கருத்தையும், நாடாளுமன்ற உறுப்பினரான ஜயம்பதி விக்கிரமரத்ன, சகல பணிகளும் முடிவடைந்துவிட்டன, அடுத்த சில நாட்களிலேயே ஜனாதிபதியிடம் சட்டமூலம் கையளிக்கப்படும் என்று இன்னொரு கருத்தையும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு ஒரே கட்சிக்குள்ளே இருவேறு கருத்துகள் வந்து கொண்டிருக்கும் நிலையில், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லமாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், செல்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியினரும் தெரிவித்து, புதிய அரசமைப்புத் தொடர்பில் கருத்து முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளனர். புதிய அரசமைப்பு விடயத்தில் இந்த அரசு கண்ணாம்பூச்சி விளையாட்டை விளையாடுகிறது.- என்றார். (ஐ)

## பயிற்சி நூல் வெளியீடு

அ.ஸ்ரீகரனின் தரம் -03 மாணவர்களுக்கான 'விரைவு கணித பயிற்சி நூல்' வெளியீடு நாளை புதன்கிழமை காலை 7.15 மணியளவில் கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும். இந்தநூலின் முதற் பிரதியை வடமராட்சி கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அபிராபி பார்த்தீபன் பெற்றுக்கொள்வார்.



காணாமற் போனோரின் உறவுகள் நேற்று கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த போது....

# கிளிநொச்சியில் தொடங்கியது தொடர் கவனவீர்ப்புப் போர்!

## காணாமற் போனோரின் உறவுகள் தீர்வு கிடைக்கும் வரை தொடர உறுதி

கிளிநொச்சி, பெப்.21

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து வெளிப்படுத்தலையும் விடுதலையையும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்களால் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களின் விடுதலைக்காக பல போராட்டங்களை நடத்தியமையுடன் அரசியல்வாதிகளிடம் பல தடவை அலைந்தனர் என்றும் அவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாமையால் ஏமாந்த நிலையிலேயே தாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், 'இலங்கை அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை உடனடியாக வெளியிடு', 'இலங்கை அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சர்வதேச சட்டங்களை ஏற்றுக்கொள்', 'அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர்பில் பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசுக்கு ஐ.நாவே மேலும் கால அவகாசம் வழங்காதே' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை வைத்திருந்தனர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களையும் அவர்கள் தம் கைகளில் வைத்திருந்தனர். தங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



இதேவேளை, மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் நேற்றிரவு 7 மணியளவில் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினர். (ம-70)

## மாணவரை வீதிக்கு இறக்கிய செயல் ஏற்புடையதேயல்ல!

புதுக்குடியிருப்பு,பெப்.21

கேப்பாபிலவில் போராட்டம் நடத்தும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி பாழாகின்றது என்று தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று சிற்சில இடங்களில் பாடசாலை வேளையில் சுமார் ஒரு மணி நேரம் பாடசாலை மாணவர்களை வீதிக்கு இறக்கினர் சில தரப்பினர்.

கேப்பாபிலவு விவகாரம் தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினை என்றாலும், சமூகத் தலைவர்கள் மட்டத்தில் தீர்க்கமான கலந்துரையாடல் ஏதுமின்றியே பாடசாலை மாணவர்கள், பாடசாலை நேரத்தில் வீதிக்கு இறக்கும் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை - இந்தக் கட்டத்தில் - பொருத்தமற்றதும், சமூகத் தீங்கானதும், தவறான முன்னுதாரணம் என்றும் 'காலைக்கதிர்' கருதுவதால் அவ்விடயம் பற்றி செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது அத்தகைய செய்கைகளை ஊக்கப்படுவதாக அமையும் என்று கருதி அவ்விடயம் பற்றிய செய்திகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.

- ஆசிரியர்

## புதிய அரசமைப்பு முயற்சிகளுக்கு எதிராக தேசிய ரீதியில் பெரும் எதிர்ப்புப் போராட்டம்

### உயிரைக் கொடுத்தேனும் நாட்டைக் காப்போம் என எதிரணி சூளுரை

கொழும்பு, பெப்.21

இலங்கையில் ஒற்றையாட்சியைச் சிதைப்பதற்கான சதித் திட்டத்தின் வெளிப்பாடே புதிய அரசமைப்பாகும் என்று தெரிவித்துள்ள கூட்டு எதிர்க்கட்சி, இது தொடர்பாகப் பொதுமக்கள் அச்சப்படத்தேவையில்லை எனவும், விரைவில் பாரிய தேசிய போராட்டத்திற்கு அவர்கள் தயாராக வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

உயிரை கொடுத்தேனும் பிரிவினைவாதிகளிடமிருந்து தாய் நாட்டை பாதுகாப்போம் எனவும் கூட்டு எதிர்க்கட்சி சூளுரைத்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் விசேட செய்தியாளர் மாநாடு பத்தரமுல்லையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றபோது, அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் சூறையாடப்பட்டு மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்கும் நோக்கமே சதிகாரர்களின் இலக்காகும். தற்போதைய அரசாங்கத்தின் ஊடாக நாடு பிளவுபடும் ஆபத்து காணப்படுகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## முன்னைய அரசின் கடனை அடைக்க 2026 ஆம் அண்டு வரை செல்லுமாம்!



### பிரதமர் ரணில் கவலை.

கொழும்பு, பெப்.21

கடந்த ஆட்சிக் காலத்தில் பெற்றுக்கொண்ட கடனை தற்போதைய அரசு மீளச் செலுத்திக்கொண்டிருக்கின்றது. 2026 ஆம் ஆண்டுதான் அதை முழுமைப்படுத்தலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2016 மே மாதத்தில் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்கவில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

கடனைச் செலுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யும் சவாலை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் தற்போது பேச்சு நடத்தி வருகின்றது எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம)

## கேப்பாபிலவு தொடர்பாக ஜனாதிபதியை சந்திக்க லங்கா சமசமாஜக் கட்சி முடிவு

'கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை சந்தித்துப் பேச்சு நடத்த லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல்பீடம் தீர்மானித்துள்ளது என அக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது கட்சியின் தேசிய அமைப்பாளரும் தென்மாகாண சபை உறுப்பினருமான வண. பத்தேகம சுமந்த தேரர் தலைமையில் தேரர்கள் சிலர் கடந்தவாரம் கேப்பாபிலவு பகுதிக்கு விஜயம் செய்து அம்மக்களைச் சந்தித்தனர்.



அதன்போது அங்குள்ள மக்கள் தாங்கள் வசித்து வந்த காணிகள் விமானப்படை வசம் இருக்கின்றன எனவும் தற்போதைய நல்லாட்சி அரசு அந்தக் காணிகளை விடுவித்துத் தருவதாக கூறிய போதிலும் இதுவரை விடுவிக்கவில்லை எனக் கூறியமையுடன் காணிக்கான உறுதிப்பத்திரங்கள் தங்களிடம் இருக்கின்றன எனவும் தெரிவித்திருந்தனர்.

பத்தேகம சமிந்த தேரர் கேப்பாபிலவு விஜயத்தின் விவரங்களை எமது கட்சியின் அரசியல் உயர் பீடத்திற்கு சமர்ப்பித்திருந்தார். எமது உயர்பீடம் நன்கு ஆராய்ந்ததையடுத்து எமது கட்சி தீர்மானம் மேற்கொண்டது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தி உடனடியாகத் தீர்வைப் பெற்றுத் தர ஜனாதிபதிக்கு அழுத்தத்தை கொடுக்கவுள்ளோம்.

கேப்பாபிலவு மக்களின் காணிப் பிரச்சினையை தென்பகுதி அரசியல்வாதிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்த சிவன் அறக் கட்டளைத் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதத்தின் சேவையை எமது கட்சி பாராட்டுகின்றது. வடக்கு - தெற்கு மக்களுக்கிடையில் இன ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான பாரிய பொறுப்பை அவர் மேற்கொண்டு வருகின்றார். - என திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது